பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல 212

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பத்தாவது பாராளுமன்றம்
(முதலாம் கூட்டத் தொடர்)

அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் இரண்டாவது அறிக்கை

அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ (வைத்தியர்) நிஷாந்த சமரவீர அவர்களால் 2025 யூன் மாதம் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கைப் பாராளுமன்றத்தால் 2025 யூன் மாதம் 04 ஆம் திகதி அச்சிடப்பட வேண்டுமென கட்டளை இடப்பட்டது.

<u>அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு</u>
<u>பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்</u>

2025 சனவரி மாதம் 09ஆந் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் விடுக்கப்பட்ட அறவித்தலின்படி, 120(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடு மற்றும் 2024 திசெம்பர் மாதம் 06ஆந் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாக தெரிவுக் குழுவினால் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் பணியாற்ற கீழ்க் காணும் பதினைந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. கௌரவ (வைத்தியர்) நிஷாந்த சமரவீர, பா.உ. (தவிசாளர்)
2. கௌரவ எம்.கே.எம். அஸ்லம், பா.உ.
3. கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ பா.உ.
4. கௌரவ கோசல நுவன் ஜயவீர, பா.உ.
5. கௌரவ சுஜீவ திசாநாயக்க, பா.உ.
6. கௌரவ சுதத் பலகல்ல, பா.உ.
7. கௌரவ (வைத்தியர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா, பா.உ.
8. கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ.
9. கௌரவ ருவன் மாபலகம, பா.உ.
10. கௌரவ சுனில் ராஜபக்ஷ, பா.உ.
11. கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ, பா.உ.
12. கௌரவ அசித நிரோஷண எகொட விதான, பா.உ.

13. கௌரவ திலிண சமரகோன், பா.உ.
14. கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி, பா.உ.
15. கௌரவ (சட்டத்தரணி) செல்வி லக்மாலி ஹேமசந்திர, பா.உ.

2025 மார்ச்சு மாதம் 21ஆந் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் விடுக்கப்பட்ட அறவித்தலின்படி, 120(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடு மற்றும் 2025 மார்ச்சு மாதம் 19ஆந் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாக தெரிவுக் குழுவினால் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் பணியாற்ற கீழ்க் காணும் பன்னிரெண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. கௌரவ மனோ கணேசன், பா. உ
2. கௌரவ (சட்டத்தரணி) அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ, பா.உ.
3. கௌரவ டி.வீ. சானக, பா.உ.
4. கௌரவ (சட்டத்தரணி) அநுராத ஜயரத்ன, பா.உ.
5. கௌரவ நலின் பண்டார ஜயமஹ, பா.உ
6. கௌரவ எஸ்.எம். மரிக்கார், பா.உ
7. கௌரவ சமிந்த விஜேசிறி, பா.உ
8. கௌரவ (சட்டத்தரணி) திருமதி. நிலந்தி கொட்டஹச்சி, பா.உ.
9. கௌரவ திலித் ஜயவீர, பா.உ.
10. கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க, பா.உ
11. கௌரவ (வைத்தியர்) பத்மநாதன் சத்தியலிங்கம், பா.உ
12. கௌரவ தினேஷ் ஹேமந்த, பா.உ

2025 மே 08ஆந் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் விடுக்கப்பட்ட அறவித்தலின்படி, 120(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடு மற்றும் 2025 மார்ச்சு மாதம் 19ஆந் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாக தெரிவுக் குழுவினால் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் பணியாற்ற கீழ்க் காணும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா, பா. உ
2. கௌரவ அக்ரம் இல்யாஸ், பா.உ.
3. கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், பா.உ.

2025 மே 20ஆந் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் விடுக்கப்பட்ட அறவித்தலின்படி, 120(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடு மற்றும் 2025 மார்ச்சு மாதம் 19ஆந் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாக தெரிவுக் குழுவினால் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் பணியாற்ற கீழ்க் காணும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. கௌரவ (சட்டத்தரணி) தயாசிறி ஜயசேகர, பா. உ
2. கௌரவ முஜிபுர் ரஹுமான், பா.உ.

<u>குழு அலுவலகத்தின் பணியாட்டொகுதி</u>

குழு அலுவலகத்தின் பணியாட்டொகுதி பின்வருமாறு.

- ❖ உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) - செல்வி ஹிமாலி சமரதிவாகர
- ❖ பிரதான அலுவலர் - திருமதி எச்.ஆர்.டி. சொய்சா
- ❖ பிரதிப் பிரதான அலுவலர் - திரு. எஸ்.எல்.விக்ரம
- ❖ பாராளுமன்ற அலுவலர் - திருமதி ஜீ.வி.எஸ்.கே. குமாரி
- ❖ பாராளுமன்ற அலுவலர் - திருமதி ஐ.எஸ். கோமஸ்
- ❖ பாராளுமன்ற அலுவலர் - திருமதி ஜீ.எல்.டி. பர்னாந்து

குழு அறிக்கைகள்

அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கைகளை www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்து கீழ்க் காணும் படிமுறை ஊடாக தரவிறக்கம் செய்ய முடியும்.

www.parliament.lk

↓

தமிழ்

↓

பாராளுமன்ற அலுவல்கள்

↓

குழுக்கள்

↓

குழு அறிக்கைகள்

பொருளடக்கம்

		பக்க எண்
1.	தவிசாளரின் குறிப்பு	V
2.	நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்	1
3.	அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவினால் விசாரணை செய்யப்பட்ட நிறுவனம் - தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை	10 - 65
4.	இணைப்புகள்	
	இணைப்பு 01 – தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கை இல 121-8 (121-7 திருத்தம்)	66-81
	இணைப்பு 02 – Lotus International Pvt. Ltd இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சத்தியக் கூற்று	82 -84

<u>தவிசாளரின் குறிப்பு</u>

இலங்கைப் பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில், 2025.03.05 மற்றும் 2025.03.27 ஆகிய இரண்டு தினங்களில் விசாரணைக்கு உட்படுத்திய கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கி வரும், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் 2023ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மற்றும் அந்த நிறுவனத்தின் தொழிற்பாடு சம்பந்தப்பட்ட வெளியீடுகள், நிதி நிலைமை, வர்த்தக மற்றும் தொழிற்பாட்டு அறிக்கைகள், உள்ளக கட்டுப்பாட்டு வழிமுறைகள் அத்துடன் வருமானம் மற்றும் செலவின திட்டமிடல்கள் அடங்கலாக அதிகார சபையின் சமகால செயல் நிறைவேற்றத்துடன் சம்பந்தப்பட்ட நிருவாக ரீதியானதும் சட்டரீதியானதுமான பொறுப்புகள் பற்றி விரிவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை இத்தால் முன்னிலைப்படுத்துகின்றேன்

“இலங்கை – நீல மாணிக்கங்களின் மூலதனம்” என்ற தொலை நோக்கையும் “ தேசிய செல்வம் மற்றும் நலன் பெறுநர்களின் மகிழ்ச்சித் தோற்றுவிப்பிற்காக அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் பிரமாணத்தின் ஊடாக இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணத் துறையின் சிறப்புத் தன்மையை எய்துதல்” என்ற செயற்பணிக் கூற்றும் இந்த நிறுவனத்தால் எந்தளவுக்கு சரியாக அடையப்பட்டுள்ளன என்பதை நாம் விசாரணைக்கு உட்படுத்தி உள்ளோம்.

1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தால் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளின்று அந்நியப்பட்டு செயலாற்றியதன் காரணமாக நிறுவனத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ள விதம், குழு அமர்வின்போது

சட்டமியற்றுநர்கள் என்ற வகையில் பாராளுமன்றப் பிரதிநிதிகளான எமது கவனத்தைப் பெற்றது.

இலங்கையின் அரசு வர்த்தக புலத்தில் பொதுச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும்போது அவற்றை பாதுகாத்துவாறு அரசாங்கத் தொழில் முயற்சிகளில் பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கட்டியெழுப்புவதே இந்தக் குழுவின் நோக்கம்.

அதேபோல், ஒட்டுமொத்த அங்கத்துவ உறுப்பினர்களின் ஆக்கபூர்வமான பங்குபற்றதலுக்கும் அவர்கள் வழங்கிய விரிவான கருத்துரைகளுக்கும் எனது பாராட்டுகள் உரித்து.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணிப்பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்ற கௌரவ சபாநாயகர் உட்பட பாராளுமன்றத்தின் பணியாட்டொகுதி மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு ஆலோசகரின் ஒத்துழைப்பையும் திறைசேரி அலுவலர்கள் அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி உட்பட கணக்காய்வு அலுவலகத்திடமிருந்து கிடைக்கின்ற ஒத்துழைப்பையும் வியந்து பாராட்டுகின்றேன்.

கௌரவ நிஷாந்த சமரவீர
தவிசாளர்
அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் இரண்டாவது அறிக்கை

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் இரண்டாவது அறிக்கையை அரசாங்க பொறுப்புமுயற்சிகள் குழு மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றது.

அனைத்து பகிரங்கக் கூட்டுத்தாபனங்களும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் அத்துடன் 07 2007ஆம் ஆண்டின் ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்படும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேலான பங்குகளை அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை வைத்திருக்கின்றதுமான கம்பனி சம்பந்தப்பட்டதாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகையை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒத்துழைப்புடன் ஆராய்தல் அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் பணியாகும்.

தற்போது, அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கண்காணிப்பின் கீழ் வருகின்றதும் அரசாங்கத் தொழில்முயற்னசிகள் திணைக்களம் மற்றும் வரவு செலவுத்

திட்ட திணைக்களத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகின்றதுமான 457 அரசாங்க பொறுப்பு முயற்சிகள் காணப்படுகின்றன. (மூலம் - அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்)

அந்தத் தொழில்முயற்சிகளில் மற்றும் 2025.03.05 ஆகிய இரு தினங்களில் விசாரணைக்கு 2025.03.27 உட்படுத்தப்பட்ட கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இயங்கும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் 2023ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மற்றும் அந்த அதிகார சபையின் தற்போதைய செயலாற்றுகையை புலனாய்வு செய்து வெளியிடப்பட்ட குழுவின் அவதானிப்புகளும் விதப்புரைகளும் இந்த அறிக்கையில் .உள்ளடக்கப்பட்டுள்ளன

<u>நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்</u>

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் 2022, 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் கீழே தரப்பட்டுள்ளது.

	கணக்காய்வு அபிப்பிராயம்		
	2022	**2023**	**2024**
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை	முனைப்பழியுள்ள அபிப்பிராயம்	முனைப்பழியுள்ள அபிப்பிராயம்	இதுரை வெளியிடப்படவில்லை

<u>கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகைகள்</u>

01. <u>முனைப்பழிவற்ற அபிப்பிராயம்</u> **(Unqualified Opinion)**

நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் நிதி நிலைமையை நியாயமாக முன்வைக்கின்றது என

02. <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயம்</u> **(Qualified Opinion)**

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என

03. <u>அபிப்பிராயம் மறுப்பு</u> (Disclaimer of Opinion)

போதுமான அல்லது பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை இணங்காண முடியாத காரணத்தினால் கணக்குகள் குறித்து ஒரு கருத்தை வெளிப்படுத்த முடியவில்லை என

04. <u>பாதகமான அபிப்பிராயம்</u> (Adverse Opinion)

நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என

<u>தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை</u>

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை) (அபிவிருத்தி அமைச்சு

விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி - 2025.03.27 மற்றும் 2025.03.05

<u>கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள்</u>

01. <u>அதிகார சபையின் அமைப்பு</u>

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் தவிசாளர் உட்பட 13 அங்கத்தவர்களை அதிகார சபையின் பணிப்பாளர் சபை கொண்டிருக்க வேண்டியதுடன், தற்போது 9 அங்கத்தவர்களை மாத்திரம்

கொண்டிருப்பதனை குழு அவதானித்தது. மேலும், நிதிக் குழுவினால் பெயரிடப்படுகின்ற இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட அலுவலர், இரத்தின கற்கள் வர்த்தக வங்கியின் தலைவர், சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதி அல்லது அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுகின்ற அத்திணைக்களத்தின் எவரேனும் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் இதுரையில் நியமிக்கப்படவில்லை என்பதை குழு அவதானித்தது.

1993ஆம் ஆண்டில் இரத்தினக்கல் வர்த்தக வங்கி சட்டம் ஆக்கப்பட்டிருப்பினும், அவ்வாறான வங்கியொன்று தாபிக்கப்படவில்லை என அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்)தெரிவித்தார்.

வர்த்தக வங்கிகள் இரத்தினக்கல் கைத்தொழிலுக்கு நிதி வழங்குவதற்கு பின்வாங்கிய காரணத்தினாலும், அவ்வாறு நிதி வழங்குவதற்கு அவர்களுக்கு இந்தத் துறை தொடர்பான நிபுணத்துவம் இல்லாத காரணத்தினாலும், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை தாபிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே நிபுணத்துவம் வாய்ந்த குழுவொன்றுடன் இந்த இரத்தினக்கல் வர்த்தக வங்கியை தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தபோதும் அது நடைமுறைக்கு வரவில்லை என அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர். சானக எல்லாவல தெரிவித்தார்.

சட்டத்தின் பிரகாரம் தாபிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட இரத்தினக்கல் வர்த்தக வங்கியானது தாபிக்கப்படாமை சிக்கலைத்

தோற்றுவிக்கும் எனவும், ஏற்புடைய சட்டத்தின் பிரகாரம் இரத்தினக்கல் வர்த்தக வங்கியை தாபித்தல் வேண்டும் அல்லது ஏற்புடைய சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனவும், வர்த்தக வங்கிகளினூடாக நிதியைப் பெற்றுக்காள்வது கடினமானது எனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக் காட்டினார்.

<u>**குழுவின் விதப்புரைகள்**</u>

<u>**பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு**</u>

I. இரத்தினக்கல் வர்த்தக வங்கி எனும் பெயரில் நிறுவனமொன்று இல்லாத காரணத்தினால் 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தை திருத்தும்போது அது தொடர்பாக கவனம் செலுத்தல்.

II. இன்றளவில் இரத்தினக்கல் வர்த்தக வங்கி என்றபெயரில் நிறுவனமொன்றுக்கான தேவை உள்ளதா என்பது பற்றிய விடயங்களை ஆராய்தல்.

III. சுங்கத் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதிகளை பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்படுவதை துரிதப்படுத்தல்.

IV. இந்த விதப்புரைகளை ஒரு மாத காலப்பகுதியினுள் (2025.04.05 ஆம் திகதிக்கு முன்னர்) நடைமுறைப்படுத்தி அது தொடர்பான அறிக்கையொன்றை

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிட்டு குழுவுக்குச் சமரப்பித்தல்.

விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்

செயலாளர்கைத்தொழில் மற்றும் தொழில் - முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றம்

விதப்புரைகளை நடைமுறைப்படுத்தியதிலுள்ள முன்னேற்றம் குறித்து 2025.05.30ஆம் திகதி வரை குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

02. மூலோபாயத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம்

இன்றளவில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கென 2027ஆம் ஆண்டு வரை மூலோபாயத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருப்பினும், அது தற்போதைய பொருளாதார கொள்கைகளின் பிரகாரம் இற்றைப்படுத்தப்பட வேண்டும் என குழு அவதானித்தது.

குழுவின் விதப்புரைகள்

கணக்கீட்டு அலுவலருக்கு

I. இலங்கையின் புதிய தேசியக் கொள்கைகள் மற்றும் தற்போதுள்ள பொருளாதார , சமூக தேவைப்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் நிலவக்கூடிய தேவைப்பாடிகளுக்கு ஏற்ற வகையில் கூட்டுத் திட்டம், மூலோபாயத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் ஆகியவற்றைத் தயாரித்தல்.

II. அதன்போது இரத்தினக்கல் மற்றும் ஆபரண துறையின் அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் ஒழுங்குறுத்தல் ஆகிய அனைத்து துறைகளுக்குரிய விடயங்கள் குறித்து தீவிர கவனம் செலுத்தல்.

III. இரத்தினக்கல் மற்றும் ஆபரண துறைக்கு புதிய தொழிநுட்பங்களைப் புகுத்துவதில் கவனம் செலுத்தல்.

IV. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு கூட்டுத் திட்டம், மூலோபாயத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை தயாரிக்கும்போது நிறுவனத்துக்குள்ளே ஏற்புடைய அலுவலர்களுடன் கலந்துரையாடி குறித்த திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

V. இது தொடர்பான அறிக்கையொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிட்டு குழுவுக்குச் சமர்ப்பித்தல்.

விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்

தவிசாளர் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண - அதிகாரசபை

குழுவின் விதப்புரைகள் நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றம்

விதப்புரைகளை நடைமுறைப்படுத்தியதிலுள்ள முன்னேற்றம் குறித்து 2025.05.30ஆம் திகதி வரை .குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை

03. பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்துதல்

2023 மற்றும் 2024 ஆண்டுகளில், குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு தடவையேனும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடத்த வேண்டியிருப்பினும், 2023ஆம் ஆண்டில் 08 கூட்டங்களும் 2024ஆம் ஆண்டில் 08 கூட்டங்களுமென நடாத்தப்பட வேண்டிய எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருப்பதை குழு அவதானித்தது.

குழுவின் விதப்புரைகள்

கணக்கீட்டு அலுவலருக்கு

I. மாதத்திற்கு குறைந்தபட்சம் ஒரு தடவை மற்றும் தேவைக்கேற்றவாறு அதிகபட்ச

தடவைகள் பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்தல்.

II. வருட இறுதியில் நடாத்தப்பட்டுள்ள பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை பற்றிய அறிக்கையொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிட்டு குழுவுக்குச் சமர்ப்பித்தல்.

<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>

தலைவர் -தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

<u>குழு விதப்புரைகளை நிறைவேற்றுதலின் முன்னேற்றம்</u>

விதப்புரைகள் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் குறித்து 2025.05.30ஆம் திகதி வரை .குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

04. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள்

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, 2024ஆம் ஆண்டில் நடாத்தப்பட வேண்டிய எண்ணிக்கையை விடக் குறைவான எண்ணிக்கையில் கணக்காய்வு மற்றும்

முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடத்தியுள்ளதாக குழு அவதானித்தது.

குழுவின் விதப்புரைகள்
கணக்கீட்டு அலுவலருக்கு

I. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை குறைந்தபட்சம் காலாண்டிற்கு ஒரு தடவையும் மற்றும் தேவைக்கேற்ப அதிகபட்மாகவும் நடத்துதல்.
II. வருட இறுதியில் நடாத்தப்பட்டுள்ள பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை பற்றிய அறிக்கையொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிட்டு குழுவுக்குச் சமர்ப்பித்தல்.

விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்

தவிசாளர் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண - அதிகாரசபை

குழுவின் விதப்புரைகள் நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றம்

விதப்புரைகளை நடைமுறைப்படுத்தியதிலுள்ள முன்னேற்றம் குறித்து 2025.05.30 ஆம் திகதி வரை குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

05. <u>பணியாட்தொகுதி</u>

- 2024.12.31ஆம் திகதியன்று பணியாட்தொகுதியின் சிரேஷ்ட மட்டத்தில் 11 வெற்றிடங்கள் மற்றும் மூன்றாம் நிலை மட்டத்தில் 16 வெற்றிடங்கள் காணப்படுவதையும்,
- பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி பதவி - 2011ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக இருப்பதையும்,
- பணிப்பாளர் (தங்க அளவினை நிர்ணயித்தல் மற்றும் இலச்சினை இடல்) - 2018ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக இருப்பதையும்,
- பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் இரத்தினவியலாளர்)- 2019ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக இருப்பதையும்,
- பணிப்பாளர் (நிதி) - 2024ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து வெற்றிடமாக இருப்பதையும் குழு அவதானித்தது.

அரசாங்கத்தின் புதிய ஆட்சேர்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெற நேரிட்டமை அத்துடன் அதற்காக நீண்ட நடைமுறையொன்றை பின்பற்ற வேண்டியிருந்தமை மற்றும் சம்பள அளவுத்திட்டங்கள் தகைமைகளுடன் பொருந்தாமை போன்ற காரணங்களினால்

சிரேஷ்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் தவறவிடப்படுவதாகவும்,

சட்டப் பிரிவிலுள்ள பணியாட்தொகுதி பற்றாக்குறை காரணமாக அமுலாக்கப் பிரிவினால் உரிமங்களை வழங்குமுன்னர் மேற்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான சரிபார்ப்பபுகளை மேற்கொள்ள முடியவில்லை எனவும்,

அதிகார சபைக்கு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள்முறைப்பாடுகள் மற்றும் , ஆட்சேபனைகள் ஏராளமானவற்றை உரிமத்தை வழங்குமுன்னர் மேற்கொள்ளப்படும் சட்டரீதியான சரிபார்ப்பின் மூலம் தவிர்த்துக் கொள்ளமுடியும்,

போன்ற விடயங்களை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் தெரிவித்தனர்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின பணிப்பாளர்

இந்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கு திட்டமிட்டுள்ளதால் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு வரையறுக்கப்பட்டுள்ளபோதும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களை கூட்டிணைத்ததன் பின்னரும்கூட இரத்துச் செய்ய முடியாத அத்தியாவசிய பதவிகளை இனங்கண்டு அவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமெனத் தெரவித்தார்.

1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சட்டத்தின் (6)8ஆம் பிரிவின்படி, தலைவர் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவிருப்பது நல்லாளுகைக்கு குறிப்பிடும்படியான பொருத்தப்பாட்டைக் கொண்டிராது எனவும், தலைவர் மற்றும் பணிப்பாளர் தலைமை அதிபதி ஆகிய இரு பதவிகளினதும் பணிப்பொறுப்புகளைத் தெளிவாக வரையறுத்து இரு பதவிகளாக நியமிக்கக் கூடியவாறு சட்டமானது திருத்தப்பட வேண்டும் எனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார்.

<u>**குழுவின் விதப்புரைகள்**</u>

<u>**பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலருக்கு:**</u>

I. தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் சட்டப் பிரிவில் நிலவும் வெற்றிடங்களைத் துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

II. அரசதொழில் முயற்சிகளை ஒன்றிணைத்தலின் கீழ் இந்நிறுவனத்தை வேறு நிறுவனங்களுடன் ஒன்றிணைத்த போதிலும் தொடர்ந்தும் அவசியமாகும் பதவிகளை அடையாளம் கண்டு அப்பதவிகளுக்கான வெற்றிடங்களை

நிரப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

III. உரிய உத்தியோகத்தர்களை உரிய பதவிகளில் கடமையாற்றுவதற்கு ஈடுபடுத்துதல் மற்றும் அக்கடமைகள் சிறப்பாக இடம்பெறுகின்றனவா என்பதனை மேற்பார்வை செய்தல்.

IV. இது தொடர்பான அறிக்கையொன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிட்டு குழுவிற்கு சமர்ப்பித்தல்.

<u>விதப்புரைகளை செயற்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>

செயலாளர் - கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் - தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை

<u>குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுதல் பற்றிய முன்னேற்றம்</u>

2025.05.30ஆம் திகதி வரையில் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல் பற்றிய முன்னேற்றம் குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

06. <u>சட்டத்தை திருத்தஞ் செய்தல்</u>

2024.05.23ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபைச் சட்டத்தை திருத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென விதப்புரை வழங்கப்பட்டிருந்தது.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கின்ற போது, அரச தொழில்முயற்சிகளை ஒன்றிணைத்தல் (Amalgamation of Public Enterprises) திட்டத்தின் கீழ் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம், புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் ஆகியவற்றை ஒன்றிணைத்து கனிய வளங்கள் பணியகத்தை (Mineral Resources Bureau) தாபிப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதால் அச்செயற்பாட்டிற்குள் நிறுவனங்களை ஒன்றிணைக்கின்றபோது அதன் குறிக்கோள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டுமெனத் தெரிவித்த அதேவேளை, சட்டத் திருத்தத்தின்போது மேற்படி விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுதல் வேண்டுமென குழு இதன்போது சுட்டிக்காட்டியது.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

<u>பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலருக்கு:</u>

I. அரச தொழில்முயற்சிகளை ஒன்றிணைத்தல் தொடர்பிலான இறுதித் தீர்மானத்திற்கமைய 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

II. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கு தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகிய இரு பதவிகளை உருவாக்கக் கூடிய வகையில் 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைச் சட்டத்தின் 8 (6) ஆவது பிரிவைத் திருத்துதல்

III. இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் முன்னேற்றம், மேம்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தல் ஊடாக கைத்தொழிற்றுறையின் முன்னேற்றத்தினை அடைந்து கொள்வதற்காக மற்றும் சகல விதமான சுற்றாடல் அழிவுகளைத் தடுப்பதற்கு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய (புவிச்சரிதவியல்

மற்றும் சுரங்கம் அகழ்வு, வன சீவராசிகள், வனப் பாதுகாப்பு, குடிநீர் முகாமைத்துவ நிறுவனங்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபை, கமத்தொழில், ... ஆகிய) சகல நிறுவனங்களையும் அடையாளம் காணுதல் மற்றும் மேற்படி பிரிவுகளின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டதாக பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைச் சட்டத் திருத்தத்தின் போது மேற்கொள்ளல்.

IV. 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைச் சட்டம் தொடர்பிலான விரிவான விளக்கத்தினை சகல உத்தியோகத்தர்களுக்கும் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தெளிவு பெற்றமைக்குரியதான தகவல்களை அதிகார சபையினால் பேணிச் செல்லல்.

<u>விதப்புரைகளை செயற்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>

செயலாளர் - கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் - தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை

__குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுதல் பற்றிய முன்னேற்றம்__

2025.05.30ஆம் திகதி வரையில் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல் பற்றிய முன்னேற்றம் குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

07. இரத்தினக்கல் கைத்தொழிற்றுறையின் ஒழுங்குபடுத்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கல் செயற்பாடு

அனுமதிப் பத்திரம் வழங்கலின் போது சுற்றாடல் மதிப்பீடு அல்லது மக்களது வாழ்க்கையில் ஏற்படும் அழுத்தங்கள் பற்றிய முறையான ஆராய்தல் எதுவும் மேற்கொள்ளப்படாத காரணத்தினால்ஆறுகள் , மாசடைதல், குடிநீர்ப்பிரச்சினைகள் மற்றும் காடழிப்புக்கள் போன்ற பாரதூரமான சுற்றாடல் மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகள் எழுந்துள்ளமை தொடர்பிலும் தற்போதுள்ள , நிலைமைகளின் கீழ் இரத்தினக்கல் கைத்தொழிற்றுறையை முறையாக ஒழுங்குறுத்துதல் மற்றும் அனுமதிப் பத்திரம் வழங்கலில் பல்வேறான குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் காணப்படுகின்றமை தொடர்பிலும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

காணியுரிமை தொடர்பான பிரச்சினைகள், விசேடமாக பிரிக்கப்படாத காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும்போது பல்வேறான குளறுபடிகள் காணப்படுவதையும், அனுமதிப் பத்திரம் வழங்கல் செயற்பாட்டின்போது சில உத்தியோகத்தர்கள் மோசடிகளைச் செய்வதற்கு தூண்டப்படலாம் என்பதையும், இதன் காரணமாக சுரங்கக் கைத்தொழிற்றுறையில் சட்டரீதியாக ஈடுபட்டுள்ள நபர்களும் சிக்கல் நிலைமைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதென்பது தொடர்பிலும் குழு அவதானித்தது.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

<u>பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு:</u>

I. மீபாகமவில் உள்ள கெபெல்ல கங்கோவிட்ட என்ற காணி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரத்தினக்கல் அகழ்விற்கான அனுமதிப்பத்திர விண்ணப்பத்தை வழங்குவது தொடர்பாக அமைச்சுக்குரிய மேன்முறையீட்டுத் தத்துவத்தைச் செயற்படுத்துகையில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையானது மேற்படி அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரித்தமைக்கு ஏதுவாக அமைந்த காரணிகள் மேன்முறையீட்டுக் குழுவில் முறையாகக் பரிசீலிக்கப்பட்டனவா, மேற்படி காரணிகளுக்கு மறுதலிப்பின்றி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டனவா

என்பது பற்றிய அறிக்கையொன்றினை 02 வாரங்களுக்குள் (2025.03.19ஆம் திகதிக்கு முன்னர்) கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியிட்டு குழுவிடம் சமர்ப்பித்தல்.

II. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையால் அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல், அனுமதிப்பத்திர காலநீடிப்புச் செய்தல், நிராகரிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சுச் செயலாளரின் தலைமையிலான மேன்முறையீட்டுக் குழுவில் அனுமதி அளிக்கப்பட்டிருப்பின், அவ்விடயம் தொடர்பான அறிக்கையொன்றினை 02 வாரங்களுக்குள் (2025.03.19ஆம் திகதிக்கு முன்னர்) கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியிட்டு குழுவிடம் சமர்ப்பித்தல்.

<u>கணக்கீட்டு அலுவலருக்கு:</u>

III. அனுமதிப்பத்திரக் கோரிக்கைகளுக்கு ஆட்சேபனைகளைத் தெரிவிப்பது தொடர்பான அறிவித்தல்களை உரிய கால எல்லைக்குள் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் அலுவலகங்களில் மற்றும் பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் உரிய முறையில் அது

இடம்பெறுகின்றதா என்பதனை மேற்பார்வை செய்தல்.

விதப்புரைகளை செயற்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்

செயலாளர் - கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் - தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுதல் பற்றிய முன்னேற்றம்

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் 2025.03.18ஆம் திகதிய மற்றும் MOIED/EDD/ADM/07/02/COPEஆம் இலக்க கடிதம் மூலமாக மீபாகமவில் உள்ள கெபெல்ல கங்கோவிட்ட என்ற காணி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரத்தினக்கல் அகழ்வதற்கான அனுமதிப்பத்திர விண்ணப்பத்தை விநியோகிப்பது தொடர்பில் அமைச்சுக்குரிய மேன்முறையீட்டுத் தத்துவத்தைச் செயற்படுத்துகையில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை மேற்படி அனுமதிப்பத்திரத்தை நிராகரித்தமைக்கு ஏதுவாக அமைந்த காரணிகள் மேன்முறையீட்டுக் குழுவில் முறையாகப் பரிசீலிக்கப்பட்டதெனக் குறிப்பிடப்பட்ட அறிக்கையொன்று குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

8. <u>இரத்தினக்கல் இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி</u>

2022, 2023 மற்றும் 2024 ஆகிய மூன்றாண்டுகளில் இலங்கை சுங்கத்தினூடாக ரூ. 2,091,693,980 மதிப்புள்ள மொத்தமாக 46,815.94 கிலோ கிராம் இரத்தினக்கற்கள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், இந்த இறக்குமதிகளிலிருந்து ரூ. 15,614,849 சமூகப் பாதுகாப்பு வரியாகவும் ரூ. 38,616,009 சேர்பெறுமதி வரியாகவும் (2024இல்) அறவிடப்பட்டிருந்ததாகவும், இம்மூன்றாண்டுகளில் ரூ.22,523,409

பெறுமதியான 1,664.06 கிலோகிராம் இரத்தினக்கற்கள் ரூ.10,723,623 பெறுமதி சேர்க்கப்பட்டு அதிகாரசபையினூடாக மீள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், மேற்படி மீள் ஏற்றுமதியின் போது சேர்பெறுமதியாக 0.5 சதவீத சேவைக் கட்டணமாக ரூ. 53,868 அறவிடப்பட்டதாகவும், குறித்த தரவுகளுக்கமைவாக மேற்படி இறக்குமதி செய்யப்பட்ட இரத்தினக்கற்களில் 3.55 சதவீதத்திற்கும் குறைவான அளவே மீள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதையும் குழு அவதானித்தது. இதற்கு மேலதிகமாக இலங்கை சுங்கத்திலிருந்து பெறப்பட்ட பின்வரும் தகவல்கள் தொடர்பாகவும் குழு தமது அவதானத்தைச் செலுத்தியது.

இறக்குமதி

வருடம்	கிலோ கிராம் அளவு	CIF (ரூபா)	SSL	VAT
2022	9,924.34	1,613,517,893.00	2,464,174.00	-
2023	11,169.25	283,147,272.00	7,786,907.00	-
2024	25,722.32	195,028,815.00	5,363,763.00	38,616,09.00
மொத்தம்	46,815.94	2,091,693,980.00	15,614,844.00	38,616,09.00

பெறுமதி சேர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டவை

வருடம்	கிலோ கிராம் அளவு	பெறுமதி (ரூபா)	பெறுமதி சேர்த்தல் (ரூபா)	பெறுமதி சேர்த்தல் (ரூபா)	ஏற்றுமதி செய்யப்பட்ட கிலோ கிராம் சதவீதம்
2022	653.8882	5,914,192	4,431,253	9,345,445	6.59
2023	555.1774	6,718,569	3,948,134	10,666,703	4.97
2024	455.0004	9,890,648	3,394,236	13,248,884	1.77
மொத்தம்	1,664,0660	22,523,409	10,773,623	33,297,032	3.55

இரத்தினக்கல் இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதியின் போது அதிகாரசபையானது முறையான ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ளாத காரணத்தினால் இறக்குமதி செய்யப்படுகின்ற இரத்தினக்கற்களின் பெறுமதி மீது அறவிடப்படுகின்ற வரி வருமானக் கணிப்பீடு மற்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற இரத்தினக்கற்களின் பெறுமதி தொடர்பாக சிக்கல் நிலைமை காணப்படுகின்றமை தொடர்பிலும் குழு அவதானித்தது.

இத்தரவுகளின்படி, இறக்குமதி செய்யப்பட்ட இரத்தினக்கற்களில் சுமார் 45,000 கிலோகிராம் அளவு பற்றிய திட்டவட்டமான தகவல்கள் எதுவும் இல்லையென்பதுடன், இது தொடர்பாக அதிகாரசபையிடமும் திட்டவட்டமான தரவுகள் இல்லாததும் ஆச்சரியமளிக்கும் விடயமென்று குழு தெரிவித்தது.

இது சம்பந்தமாக இலங்கையின் வைரக்கல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் தரவுகள் பின்வருமாறு.

வருடம்	வைரக்கல் இறக்குமதி	வைரக்கல் ஏற்றுமதி	மொத்த இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதி
2021	130 மில்லியன் டொலர்	121 மில்லியன் டொலர்	294 மில்லியன் டொலர்
2022	189 மில்லியன் டொலர்	158 மில்லியன் டொலர்	399 மில்லியன் டொலர்
2023	236 மில்லியன் டொலர்	222 மில்லியன் டொலர்	388 மில்லியன் டொலர்
2024			282 மில்லியன் டொலர் (இதில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இரத்தினக்கல் ஏற்றுமதி 108 மில்லியன் டொலர் ஆகும்)

அதேபோல், இலங்கையின் இரத்தினக்கல் ஏற்றுமதியில் சுமார் 60% இரத்தினக்கல் மீள் ஏற்றுமதியாக இருப்பதுடன், உள்நாட்டு இரத்தினக்கல் ஏற்றுமதியை இரத்தினக்கல் இறக்குமதியுடன் ஒப்பிடும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட இரத்தினக்கல் மீள் ஏற்றுமதியில் பாரிய வீழ்ச்சி காணப்படுவதாகவும் மேலும் அவதானிக்கப்பட்டது.

இரத்தினக்கல் இறக்குமதியை ஒழுங்குறுத்துவது அதிகாரசபையின் நோக்கெல்லைக்குரிய ஒரு விடயம் என்பதால், மீள் ஏற்றுமதிக்காக இரத்தினக்கல் இறக்குமதி பற்றிய தகவல்கள் அதிகாரசபையிடம் இருக்க வேண்டும் என்றும்

அவ்வாறல்லாமை சிக்கல்களுக்கு வழிவகுத்துள்ளது என்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார்.

இவ்விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்த தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் தலைவர், தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்கும் இலங்கைச் சுங்கத்திற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒள்ளைக் கைச்சாத்திடத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் இந்தத் தகவல்களை இலங்கைச் சுங்கத்திலிருந்து மாதாந்தம் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அதற்காக சட்டத்துறை தலைமையதிபதியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகக் கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது மேற்படி புரிந்துணர்வு உடன்படிக்கையின் வரைவு மேற்படி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இருந்தபோதிலும் இரத்தினக்கல் நிறுவனத்தை ஒழுங்குறுத்தாமை, இரத்தினக்கல் நிறுவனமானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான தரவுகளைச் சரியான முறையில் முகாமைத்துவம் செய்யாமை மற்றும் இவ்விடயம் பற்றிய புள்ளிவிபரங்கள் அதிகாரசபையிடம் இல்லாமை என்பன அதிகாரசபையின் பணிகள் தவறவிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படுவதாக குழு வலியுறுத்தியது.

<u>**குழுவின் விதப்புரைகள்**</u>

<u>**பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு:**</u>

I. இலங்கைச் சுங்கத்தின் ஊடாக 2022, 2023 மற்றும் 2024 ஆகிய மூன்று வருடங்களில் ரூ. 2,091,693,980 பெறுமதியான மொத்தம் 46,815.94 Kg இரத்தினக்கற்கள் இறக்குமதி செய்யப்பட்டுன்னமை, இந்த இறக்குமதிகள் ஊடாக ரூ. 15,614,849 சமூகப் பாதுகாப்பு வரியும் ரூ. 38,616,009 சேர் பெறுமதி வரியும் (2024 இல்) அறவிடப்பட்டுள்ளமை, இந்த மூன்று வருடங்களில் ரூ. 22,523,409 பெறுமதியான சுமார் 1,664.06 Kg இரத்தினக்கற்களை மாத்திரம் ரூ. 10,723,623 பெறுமதியைச் சேர்த்து அதிகாரசபை மூலம் மீள் ஏற்றுமதி செய்துள்ளமை குறித்த அறிக்கையொன்றை 01 மாதத்திற்குள் (2025.04.05 ஆம் திகதிக்கு முன்) கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியிட்டு குழுவிடம் சமர்ப்பித்தல்.

II. இரத்தினக்கற்களை இறக்குமதி செய்கையிலும் மீள் ஏற்றுமதி செய்கையிலும் அதிகாரசபை முறையான ஒழுங்குறுத்தல்களை மேற்கொள்ளாத காரணத்தால் இறக்குமதி செய்யப்படும் இரத்தினக்கற்களின் பெறுமதிக்கேற்ப அறவிடப்படும் வரியைக் கணக்கிடுதல்

மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினக்கற்களின் பெறுமதி மற்றும் அதனடிப்படையில் அறவிடப்படவேண்டிய வரியை அறவிடுல் பற்றி ஆராய்தல்.

<u>விதப்புரைகளை செயற்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>

செயலாளர் - கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் - தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

<u>குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுதல் பற்றிய முன்னேற்றம்</u>

விதப்புரைகளைச் செயற்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் பற்றி 2025.05.30ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

09. **<u>இரத்தினக்கல் ஏற்றுமதியின்போது அறவிடப்படும் ரூ. 3500 கட்டணம்</u>**

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையும் இலங்கைச் சுங்கமும் இணைந்து இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களை ஏற்றுமதிக்கென கொண்டு செல்வதாகவும், இலச்சினையிடப்பட்ட இரத்தினக்கற் பொதிகளை கட்டுநாயக்க விமான நிலையத்திற்குக் கொண்டு செல்லும் பொறுப்பை இலங்கைச் சுங்கம் கொண்டுளன்ள்ளது என்பதையும், அச்சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் பாதுகாப்பு அலுவலரின் சேவைக்காக தேசிய இரத்தினக்கல்,

ஆபரண அதிகாரசபை 500 ரூபாவை மட்டும் அறவிடுவதையும் குழு அவதானித்தது.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

<u>பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு மற்றும் கணக்கீட்டு அலுவலருக்கு:</u>

I. இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து 01 மாதத்திற்குள் (2025.04.05ஆம் திகதிக்கு முன்) கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியிட்டு குழுவிடம் அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

<u>விதப்புரைகளை செயற்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>

செயலாளர் - கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் - தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

<u>குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுதல் பற்றிய முன்னேற்றம்</u>

விதப்புரைகளைச் செயற்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் பற்றி 2025.05.30ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

10. **<u>இரத்தினக்கல் இறக்குமதி</u>**

இரத்தினக்கற்களை இறக்குமதி செய்யும்போது இரத்தினக்கற்கள் அடங்கிய ஒரு பொதிக்கு 200 டொலர் கட்டணம் செலுத்தி கொண்டு வரப்படுவதாகவும், இலங்கையில் வெட்டி, பட்டை தீட்டப்பட்டு (cut & polish) மீள் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும், இது தொடர்பாக பின்வரும் சிக்கல்கள் எழுவதையும் குழு அவதானித்தது.

- இறக்குமதிகளை இந்த நிறுவனம் மேற்பார்வை செய்வதுடன், தொடர்புடைய இறக்குமதி நிறுவனங்கள் மெருகூட்டுவதற்காக கொண்டு வரப்படும் இரத்தினக்கற்களை மீள் ஏற்றுமதி செய்யும் கடப்பாட்டைக் கொண்டுள்ளதுடன், கிடைக்கப்பெற்ற இரத்தினக்கற்களின் அளவு அவை எவ்வாறு மெருகூட்டப்படுகின்றன மற்றும் மீதமுள்ள கையிருப்பின் அளவு போன்றவை சோதனையிடப்படாமை போன்ற விடயங்களின் அடிப்படையில் இரத்தினக்கல் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான போதிய ஒழுங்குறுத்தல்கள் இல்லாமை.

  - இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூர் இரத்தினக்கற்களை எவ்வாறு வேறுபடுத்தி இனங்கண்டு அறிக்கையிடுதல்.

  - அதிகாரசபையில் இறக்குமதிப் பிரிவு இல்லாமை அல்லது வினைத்திறனற்ற விதத்தில் செயற்படல்.

- வரலாற்று ரீதியாக, நாட்டிற்குள் இரத்தினக்கற்களைக் கொண்டுவருவதற்கு அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்திற்கு மட்டுமே அதிகாரம் இருந்ததாகவும், புதிய சட்டம் இயற்றப்பட்டதன் பின்னர் கடுமையான இறக்குமதி ஒழுங்கு விதிகள் எதிர்பார்க்கப்பட்டாலும் அவை பயனுள்ள வகையில் செயற்படுத்தப்படாமை.

- இரத்தினக்கல் பொதிகளை ஆய்வு செய்வதற்கான வலுவான முறையொன்று இல்லாததால், அறிவிக்கப்படாத அதிக பெறுமதியுள்ள இரத்தினக்கற்கள் நாட்டிற்குள் கொண்டு வரப்படுவதற்கான வாய்ப்புள்ளமை.

1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 55ஆம் பிரிவில் ‘இரத்தினக்கற் கைத்தொழில்' என்பதற்குக் அளிக்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி (ஆ) பகுதியில் 'இரத்தினக்கற்களை இலங்கைக்கு இறக்குமதி செய்தல் அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்தல்’ என்பதன் மூலம் இரத்தினக்கள் இறக்குமதியை ஒழுங்குறுத்துவதற்குரிய முழுமையான தத்துவங்களை தேசிய

இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்கு கொண்டுள்ளதாக குழு சுட்டிக்காட்டியது.

1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தில்;

- 14ஆம் பிரிவில் புள்ளிவிபரங்களைச் சேகரிக்கும் அதிகாரம் காணப்படுவதாகவும்,

- 16ஆம் பிரிவில் 'ஆளெவரும் அதிகாரசபையின் அங்கீகாரத்துடனன்றி, இலங்கையிலிருந்து இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்தல் கூடாது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதில் இரத்தினக்கற்களை இறக்குமதி செய்வது பற்றி குறிப்பிடப்படவில்லை எனவும்,

- 55ஆம் பிரிவில் ‘இரத்தினக்கற் கைத்தொழில்' என்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் 'இரத்தினக்கற்களை இலங்கைக்கு இறக்குமதி செய்தல் அல்லது இலங்கையிலிருந்து இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்தல்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதாகவும் இது தொடர்பாக

கணக்காய்வு முகாமைத்துவக் குழுவினால் கலந்துரையாடப்பட்டதாகவும்,

- இது தொடர்பாக எதிர்காலத்தில் இலங்கைச் சுங்கத்துடன் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் இரத்தினக்கற்களை இறக்குமதி செய்யும்போது தொடர்புடைய இறக்குமதியாளருக்கு இரத்தினக்கல் வர்த்தக உரிமம் உள்ளதா என்பதை சோதிக்குமாறு இலங்கைச் சுங்கத்திற்கு கடிதம் மூலம் அறிவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) தெரிவித்தார்.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

<u>கணக்கீட்டு அலுவலருக்கு:</u>

I. இரத்தினக்கற்கள் இறக்குமதியை ஒழுங்குறுத்துவதற்கான சரியான முறைமையொன்றைத் தயாரித்து தொடர்ச்சியாக செயற்படுத்துதல் மற்றும் அது தொடர்பான அறிக்கையை 01 மாதத்திற்குள் (2025.04.05ஆம் திகதிக்கு முன்) கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியிட்டு குழுவிடம் சமர்ப்பித்தல்.

<u>**விதப்புரைகளை செயற்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்**</u>

செயலாளர் - கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் - தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

<u>**குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுதல் பற்றிய முன்னேற்றம்**</u>

விதப்புரைகளைச் செயற்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் பற்றி 2025.05.30ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

11. <u>**தங்கம் இறக்குமதி**</u>

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் (ஏற்றுமதி சேவைகள் மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்தல்)

- தங்கத்தை இறக்குமதி செய்வது தற்போது தடைசெய்யப்பட்டுள்ள ஓர் உருப்படி எனவும்,
- இருப்பினும் தங்கத்தை மீள் ஏற்றுமதி செய்வதற்காக T வகைப்படுத்தலின் கீழ் தங்கத்தை இறக்குமதி செய்வதற்கான உரிமங்களை அதிகாரசபை வழங்குவதாகவும்,
- தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை, முதலீட்டு ஊக்குவிப்புச் சபை மற்றும் இலங்கைச் சுங்கம் ஆகிய மூன்று

நிறுவனங்களும் இது தொடர்பாக சோதனைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தங்கம் இறக்குமதி தொடர்பான தரவுகளைச் சமர்ப்பிக்குமாறு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளரிடம் (ஏற்றுமதிச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்தல்) கணக்காய்வாளர் தலைமையதிபதி தெரிவித்தார்.

இதன்படி ஏற்றுமதிப் பிரிவோடு மட்டுமே செயற்படுவதாக அதிகாரசபை முன்னர் கூறியிருந்தாலும் இரத்தினக்கற்கள் மற்றும் தங்க இறக்குமதிகளை ஒழுங்குறுத்துவது தொடர்பான சில நடவடிக்கைகளை அது மேற்கொண்டு வருவதை குழு அவதானித்தது.

<u>**குழுவின் விதப்புரைகள்**</u>

<u>**கணக்கீட்டு அலுவலருக்கு:**</u>

I. தங்கம் இறக்குமதியில் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் ஒழுங்குறுத்தல்களுக்கு ஏற்புடையதாதல்/ஏற்புடையதாகாமை மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான அறிக்கையை 01 மாதத்திற்குள் (2025.04.05ஆம் திகதிக்கு முன்)

கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியிட்டு குழுவிடம் சமர்ப்பித்தல்.

விதப்புரைகளை செயற்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்

செயலாளர் - கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் - தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுதல் பற்றிய முன்னேற்றம்

விதப்புரைகளைச் செயற்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் பற்றி 2025.05.30ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

12. இரத்தினக்கல் அகழ்வுகளுக்கான உரிமங்களின் எண்ணிக்கையும் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானமும்

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் தலைவர் பின்வரும் தகவல்களை வெளியிட்டார்.

வருடம்	இரத்தினக்கற்கள் ஏற்றுமதி (மில்லியன் டொலர்)	ஆபரணங்கள் ஏற்றுமதி (மில்லியன் டொலர்)	வைரக்கற்கள் ஏற்றுமதி (மில்லியன் டொலர்)	மொத்த ஏற்றுமதி (மில்லியன் டொலர்)
2023	151.8	13.6	194.9	360
2024			151.8	

- இந்நிலைமையானது 2023ஆம் ஆண்டில் மொத்த இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதியான 477 மில்லியன் டொலருடன் ஒப்பிடும்போது 25% குறைந்துள்ளதாகவும்,
- வைரங்கள் ஏற்றுமதி 194.9 மில்லியன் டொலரிருந்து 151.8 மில்லியன் டொலராகக் குறைந்துள்ளதாகவும்,
- தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை இரத்தினக்கல் அகழ்வுகளுக்கான 7000 உரிமங்களை வழங்கியுள்ளதாகவும்,

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் சபை உறுப்பினரும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவருமானவர், 2024ஆம் ஆண்டில் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் துறைக்கு சேர் பெறுமதி வரி

விதிக்கப்பட்டதே இந்நிலைமைக்குக் காரணமெனவும் வரி ஏய்ப்பு அதனாலேயே இடம்பெறுவதாக அவதானிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

13. **<u>25 கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்கக்கற்கள் அடங்கிய பொதியொள்றை 2024 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் 20 ஆம் திகதியன்று பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ரூ. 10,000 தண்டப் பணத்திற்குற்பட்டு விடுவித்தமை</u>**

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (CID) ஒப்படைக்கப்பட்ட, குறைந்த மதிபீட்டின் கீழ், மோசடியான முறையில் நாட்டுக்கு வெளியே கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த, சுமார் 25 கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்கக் கற்கள் தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

இலங்கைச் சுங்கத் திணைக்களம் குறித்த மாணிக்கக் கற்களை கைப்பற்றும் சந்தர்ப்பத்தில் குறித்து வைக்கப்பட்ட ஆவணத்தில் அதன் கரட் அளவு 21,096 என குறிப்பிடப்பட்டிருந்தாகவும், தேசிய இரத்தினக்க்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் மதிப்பீட்டு அலுவலர்களிடம் ஒப்படைக்கும்போது அதன் கரட் அளவானது 19,600 ஆக காணப்பட்டதாவும், அதற்கமைவாக 1496 கரட் மாணிக்கக் கற்கள் குறைவடைந்துள்ளமை குழுவினால் அவதானிக்க முடிந்துள்ளது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் மதிப்பீட்டுற்கு அமைவாக மேற்படி மாணிக்க கற்களின் பெறுமதியானது, ரூ.15 கோடியாக இருந்த போதிலும், குறிப்பிட்ட வர்த்தக நிறுவனமான "Elegant Gems" இனால் சமர்ப்பிக்கப்பட்ட முதல் விபரப் பட்டியலில் அதன் மதிப்பீட்டுத் தொகை சுமார் 70,817 டொலர் என குறிப்பிடப்பட்டிருந்ததோடு, அப்போதைய நாணயமாற்று விகிதத்துக்குமைவாக அதன் இலங்கை ரூபாயின் பெறுமதி 25,942,228.73 என்பதும் அவதானிக்கப்பட்டது. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளரொருவர் (மதிப்பீடு/இரத்தினவியலாளர்) கூறுகையில், குறித்த மாணிக்கக் கற்களை மதிப்பீடு செய்வதற்காக முதற் தடவை சமர்ப்பிக்கப்பட்ட போது அதன் பெறுமதி குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்ததாகவும், அதன்போது சிறிய மாணிக்கக் கற்களின் பொதிகளை கலந்து சமர்ப்பித்துள்ள போதிலும், இச்சிறிய மாணிக்கக் கற்களுடன் பெரிய அளவிலான மாணிக்கக் கற்களும், Blue Sapphire, புஷ்பராகம் போன்ற அதிக பெறுமதியுடைய மாணிக்க கற்களும் கலந்திருப்பதை அவதானித்ததாகவும், அதற்கமைவாக "Elegant Gems" இனால் சமர்ப்பீக்கப்பட்ட மதிப்பீடானது உண்மைப் பெறுமதியுடன் பொருந்தவில்லை என்பதை தான் உணர்ந்ததாகவும், அது தொடர்பாக அப்போது கடமையிலிருந்த பதில் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்ததாகவும் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக குழு மேலும் வினவியபோது, குறித்த சம்பவம் தொடர்பில்

விசாரணைகளை மேற்கொண்டதாகவும், கைத்தொழில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இது தொடர்பாக முறைப்பாடென்றை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதை தொடர்ந்து, இது தொடர்பாக நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், குறித்த மாணிக்கக் கற்களுக்கு மீண்டும் மதிப்பீடொன்றை மேற்கொண்டு சமர்ப்பிக்குமாறு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு நீதிமன்றம் பணித்துள்ளமை குழுவில் வெளிக்கொணரப்பட்டது. குறித்த மாணிக்கக் கற்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அங்கு மாணிக்கக் கற்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முதல் விபரப் பட்டியலில் குறிப்பிட்டிருந்த கரட் அளவுக்கும் மதீப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் அடையாளங்காணப்பட்ட கரட் அளவுக்குமிடையில் வித்தியாசமொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், குறித்த கரட் அளவின் அடிப்படையில் மாணிக்க கற்களின் பெறுமதி சுமார் 15 கோடி ரூபாவிற்கு மதிப்பீடு செய்துள்ளமை வெளிக்கொணரப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைகள் தொடந்து இடம்பெற்று வருவதாகவும், குற்றவியல் குற்றச்சாட்டுக்களை சுமத்துமளவுக்கு போதிய சாட்சிகள் வெளிவராத காரணத்தினால் “ 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண

அதிகாரசபைச் சட்டத்திற்கு அமைவாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு" தீர்மானமளிக்கப்பட்டுள்ளதாக இதன் போது குழுவிற்கு அறிய முடிந்தது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் குறித்த மாணிக்கக் கற்களை நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்ததை தொடர்ந்து "அச்சான்றுப் பொருளை கௌரவ நீதிமன்றம் முறையாகப் பொறுப்பேற்று அச்சான்றுப் பொருளை விடுவித்தல் தொடர்பாக 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்திற்கு அமைவாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு" தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

2024 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் 18 ஆம் திகதி வழக்கு இலக்கம் பீ.2376/22 இன் கீழ் கோட்டை நீதவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளை கீழ்வருமாறு.

"ஆகையால், 1979 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 124 பிரிவிற்கமைவாக எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக, இந்த விசாரணையின்போது கைப்பற்றப்பட்டு தற்போது இந்த நீதிமன்றத்தின் பொறுப்பில் காணப்படுகின்ற மாணிக்கக் கற்கள் உள்ளடங்கிய சான்றுப் பொருட்களை விடுவித்தல் தொடர்பாக 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண

அதிகாரசபைச் சட்டத்திற்கமைவாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையிடம் அச்சான்றுப் பொருட்களை விடுவிப்பதோடு, சட்டத்துறை தலைமையதியதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, அச்சான்றுப் பொருட்களை கௌரவ நீதிமன்றம் உரியவாறு பொறுப்பேற்று குறித்த சான்றுப் பொருட்களை விடுவித்தல் தொடர்பாக 1993 ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்திற்கமைவாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளராகிய தாங்களுக்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்".

அதற்கமைவாக, இது தொடர்பான விடயங்களை முன்வைத்து தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் (ஏற்றுமதிச் சேவைகள் மற்றும் ஏற்றுமதிச் சந்தைப்படுத்தல்) தெரிவிக்கையில், மேற்படி விடுவிப்பானது 2024 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் 18ஆம் திகதிய நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டதாகவும், இது தொடர்பில் பணிப்பாளர் சபை அறிந்திருந்ததாகவும், மாணிக்கக் கற்களை கைப்பற்றுதல், நீதிமன்றத்திற்கு ஒப்படைத்தல் மற்றும் மீளப் பொறுப்பேற்றல் அவ்வப்போது இடம்பெற்றதாகவும், மாணிக்க கற்களை கைப்பற்றியதன் பின்னரும் நீதிமன்றத்தால் சீல் வைக்கப்பட்டு அதிகாரசபையின் பொறுப்பிலுள்ள பாதுகாப்புப் பெட்டகத்தில் உதவிப் பணிப்பாளர்கள் இருவரின் உடைமையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததெனவும்

தெரிவித்தார். தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளரின் (நடவடிக்கை மற்றும் பிரதேச அபிவிருத்தி) உத்தரவின் பேரிலேயே குறித்த மாணிக்கக் கற்கள் விடுவிக்கப்பட்டதெனவும், மேற்படி பணிப்பாளர் மேற்கொண்ட கள ஆய்வு அறிக்கையில் விசாரணை அலுவலரின் விதப்புரையாக ‘உள்ளகச் சுற்றறிக்கை இலக்கம் 121-8 (121-7 திருத்த) அமைவாக இதனை ரூ.10,000/- இற்கு உட்பட்டதாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு விதந்துரைக்குமாறு தமக்கு கட்டளை கிடைத்ததாகவும், அதற்கமைவாக பணிப்பாளர் நாயகத்தின் கட்டளையாக “ரூ. 10,000/- இணக்க கட்டணமாகப் அறவிட்டு விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு” 2024.09.25ஆம் திகதி உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக 2024.09.26ஆம் திகதி மாணிக்கக் கற்களை ரூ.10,000/- இணக்க கட்டணத்தை அறவிட்டு "Elegant Gems" நிறுவனத்திற்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை அறியமுடிந்தது.

எவ்வாறாயினும், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் (நடவடிக்கை மற்றும் பிரதேச அபிவிருத்தி) தான் அவ்வாறான கட்டளையொன்றை வழங்கவில்லை என்றும், தனக்கு மாத்திரம் இவ்வாறான விடுவிப்பை அங்கீகரிக்க முடியாது எனவும் தெரிவித்தார். மேலும், "Elegant Gems" நிறுவனம் வரையறுக்கப்படாத உரிமத்தைக் (Unlimited License) கொண்ட நிறுவனம் என்றும், தனது விசாரணைக்கு அமைவாக நிறுவனம் எவ்வித

தவறையும் புரியவில்லை என்றும், இரத்தினக் கற்கள் கலவையாகக் காணப்பட்டதாகவும், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் உள்ளகச் சுற்றறிக்கை இல. 121-8 (121-7 திருத்தம்) இன் கீழ் அதில் குறிப்பிடப்படாத தவறு தொடர்பில் ரூ.10,000/- தொடக்கம் ரூ. 333,333.33 வரையில் மத்தியஸ்தக் கட்டணமொன்றை விதிக்க முடியுமென்றும், அதற்கமைவாக "Elegant Gems" நிறுவனம் தெளிவாகக் கண்டறியக்கூடிய ஒரு தவறைப் புரியவில்லை என்றும், நிறுவனத்திடம் காணப்படுகின்ற வரையறுக்கப்படாத உரிமத்திற்கு அமைவாக சோதனை நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொண்டதாகவும், ரூ.10,000/- ஆகிய மிகக்குறைவான மத்தியஸ்தக் கட்டணத்தை இந்நிறுவனத்திற்கு விதித்ததாகவும் தெரிவித்தார்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்), இவ்விடயம் பற்றி கூறுகையில், 2024 செப்தெம்பர் மாதம் 20ஆம் திகதி பணிப்பாளர் சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அது அங்கீகரிக்கப்படவில்லை என்பதை பணிப்பாளர் சபையின் அப்போதைய செயலாளர் திருமதி. சானிக்கா ஹேரத் எழுத்துமூலம் தெரிவித்திருந்ததாகவும், இந்த இரத்தினக்கல் கையிருப்புத் தொகை 2024.09.18ஆம் திகதிய நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் 2024.09.27ஆம் திகதி "Elegant Gems" நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டதாகவும், இரத்தினக் கற்களை விடுவிப்பதற்கு முன்னர் இவ்விடயம் தொடர்பில் சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனைகள் பெறப்படவில்லை என்றும், இரத்தினக் கற்களை விடுவித்ததன் பின்னர்

சட்டத்துறை தலைமை அதிபதியை அதுகுறித்து விழிப்புணர்வு செய்ததாகவும் தெரிவித்தார்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை 2024.09.18ஆம் திகதிய வழக்கு இலக்கம் பீ. 23761/22 இன் கீழ் நீதவான் நீதிமன்றம் வழங்கிய நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக செயற்படவில்லை என்றும், அத்தீர்ப்புக்கு அமைவாக இது தொடர்பில் **சட்டத்துறை தலைமை அதிபதியிடம் ஆலோசனைகள் கோரப்படவில்லை என்றும், அதற்கமைவாக** 2024.09.26ஆம் திகதி இரத்தினக்கல் கையிருப்புத் தொகையை உள்ளகச் சுற்றறிக்கை இல. 121-8 (121-7 திருத்தம்) (இணைப்பு) இன் கீழ் **பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி** ரூ.10,000/ ஐ மத்தியஸ்தக் கட்டணமாக அறவிட்டு **"Elegant Gems"** நிறுவனத்திற்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டமை **சட்டத்திற்கு முரணான செயலென** குழு முன் வெளிக்கொணரப்பட்டது.

<u>குழுவின் விதப்புரை</u>

<u>பிரதான பொறுப்பக்கூறும் அலுவலர் மற்றும் பொறுப்புக்கூறும் அலுவலருக்கு;</u>

I. **குறித்த இரத்தினக்கல் பொதியை விடுவித்தமை தொடர்பில் சுயாதீன விசாரணைக் குழுவொன்றை நியமித்து விசாரணை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்கண்டு தேவையான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியிட்டு ஒரு மாத காலப்பகுதியினுள் (2025.04.05 திகதிக்கு**

முன்னர்) குழுவிற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.

விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/நிறுவனங்கள்

செயலாளர் – கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தவிசாளர் - தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

குழு விப்புரைகளை நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்

கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளரது. MOIED/EDD/ADM/ES/02/06 ஆம் இல மற்றும் 2025.05.07ஆம் திகதிய கடிதத்தினூடாக குழு வழங்கிய விதப்புரைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொண்டு குறித்த அறிக்கையைக் குழுவிற்குச் சமர்ப்பிக்க 2025.06.15ஆம் திகதி வரையில் மேலதிக காலத்தை வழங்குமாறு குழுவில் கோரிக்கை முக்வைக்கப்பட்டுள்ளது.

14. **இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியால் கிடைக்கும் வெளிநாட்டு அனுப்புகைகளின் அளவு**

இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியால் அதிகாரசபைக்கு கிடைக்கும் வெளிநாட்டு பண அனுப்பலின் அளவு தொடர்பாக குழு அவதானித்ததுடன், இரத்தினக்கல் ஏற்றுமதியை மேம்படுத்தல், இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் குறித்த ஏற்றுமதி வருமானம் உரியவாறு நாட்டிற்கு கிடைக்கின்றதா என்பது தொடர்பில்

ஆராய்ந்து பார்ப்பதற்கான ஒழுங்குபடுத்தல் வழிமுறையொன்றை தயாரிப்பது தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

அதன்போது தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை இரத்தினக்கல் ஏற்றுமதியை மேம்படுத்த வேண்டுமெனவும், ஏற்றுமதியாளர்களுக்கு வசதிகளை வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதி மூலமாகக் கிடைத்த வெளிநாட்டு பண அனுப்பல் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், 2023ஆம் ஆண்டில் இத்தொகையானது **56 மில்லியன் அமெரிக்க டொலராக** காணப்பட்டதுடன், **2024ஆம் ஆண்டில் அது 30 மில்லியன் அமெரிக்க டொலர் வரை வீழ்ச்சியடைந்தது.** அதிகார சபை தயாரித்த ஒழுங்குபடுத்தல் வழிமுறையினை நடைமுறைப்படுத்துகையில் வரையறைகள் காணப்படுகின்றமை பற்றி தெரியவந்ததுடன் குறிப்பாக, ஏற்றுமதியாளர்களின் வரத்தக வங்கிகளினூடாக அதிகாரசபைக்கு **நேரடியாக பண அனுப்பல் பற்றிய தகவல்களை வழங்காமை** மற்றும் ஏற்றுமதியாளர்களின் **விற்பனைகள் மற்றும் பெறுமதிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள அதிகாரசபை தத்துவங்களைக் கொண்டிராமை** இந்த வரையறைகளின் முக்கியமான விடயங்களாக அவதானிக்கப்பட்டன.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தவிசாளர் இது தொடர்பாக தெளிவுபடுத்துகையில், அதிகார சபை தயாரித்த ஒழுங்குபடுத்தல் வழிமுறையை

நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றுமதியாளர்களின் வர்த்தக வங்கிகள் மூலமாக நேரடியாக மேற்கொள்ளும் அதிகார சபைக்கான பண அனுப்பல் பற்றிய தகவல்களையும் ஏற்றுமதியாளர்களின் **விற்பனைகள் மற்றும் பெறுமதிகள் தொடர்பான தகவல்களையும் பெற்றுக்கொள்ள அதிகாரசபை தத்துவங்களையும் கொண்டுள்ளதாகவும், அத்தகைய தத்துவங்கள் காணப்பட்ட நிலையிலும் இந்த வழிமுறை செயற்படுத்தப்படவில்லை என்றும், இது மேற்கொள்ளக் கூடிய ஒரு பணி எனவும் தெரிவித்தார்.**

<u>குழுவின் விதப்புரைகள்</u>

<u>பிரதான பொறுப்பக்கூறும் அலுவலர் மற்றும் பொறுப்புக்கூறும் அலுவலருக்கு</u>

I. ஏற்றுமதி வருமானத்தை உரியவாறு நாட்டுக்குள் கொண்டு வரும் ஒழுங்குபடுத்தல் வழிமுறையை செயற்படுத்துவதில் ஏற்றுமதியாளர்களின், வணிக வங்கிகள் நேரடியாக அதிகாரசபைக்கு நிஜ பண அனுப்புதல் விபரங்களை வழங்காமை மற்றும் நிஜ விற்பனை பெறுமதிகளை ஏற்றுமதியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதில் ஏற்படக்கூடிய சிரமங்களை தடுப்பதற்கு அதிகாரசபைக்கு காணப்படும் அதிகாரத்தை உரியவாறு செயற்படுத்தல்.

விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள்/ நிறுவனங்கள்

செயலாளர் – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச்சு

தலைவர் – தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுவதில் எட்டடப்பட்டுள்ள முன்னேற்றம்

விதப்புரைகளை நிறைவேற்றுவதில் எட்டடப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து 2025.05.30 அம் திகதி வரை குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

15 **<u>மாணிக்கக் கற்கள் மதிப்பீட்டுச் செயற்பாட்டில் காணப்படும் பிரச்சனைகள்</u>**

தற்போதுள்ள மாணிக்கக் கற்கள் மதிப்பீட்டு முறைமையானது, அவதானிப்புகளை அடிப்படையாக கொண்டதொரு செயன்முறை என்பதால் நபருக்கு நபர் அது மாறுவதால், சீரான மதிப்பீடுகளை பெறுவது சிரமமென்பது குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர், இரத்தினவியலாளர் பதவிக்கு வெற்றிடம் நிலவுதல், பயிற்சி பெற்ற அலுவலர்களின் தட்டுப்பாடு மற்றும் உலகின் அநேகமான நாடுகளில் மாணிக்கக் கற்கள் ஏற்றுமதிக்கு மதிப்பீட்டு முறையொன்று

காணப்படாமை போன்ற விடயங்களை கவனத்தில் கொண்டு, அவற்றை நீக்குவதன் மூலம் ஏற்றுமதியை உயர்த்த முடியுமெனவும் குழுவில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

16 <u>**பயிற்சி அலுவலர்களின் தேவையும் பயிற்சித்திட்டங்களும்**</u>

பயிற்சி அலுவலர்களின் தேவைகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் தொடர்பாக விடயங்களை ஆராய்ந்த குழு, இலங்கை மாணிக்கக் கற்களை மதிப்பீடு செய்யும் சான்றிதழுக்கு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தியது.

2018 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட *ISO 17025* சான்றிதழை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் *2024* ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் *31* ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும், இந்த விடயத்தில் ஆலோசகராக பணியாற்றும் *ITI* நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை *2020* ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் *28* அம் திகதி நிறைவு பெற்றுள்ளதென்பதும் குழுவில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

ஆய்வகத்தில் பணியாற்றும் இராசாயனவியலாளர்களுக்கு மாணிக்கவியல் தொடர்பான சர்வதேச தகைமைகளை வழங்க வேண்டுமென்பதோடு, அதன் பொருட்டு Fellowship of Gemological Association (FGA) Gemological

Institute of America (GIA) டிப்ளோமா பாடநெறி மற்றும் வெளிநாட்டு ஆய்வகங்களில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டுமெனவும் அதிகாரசபையில் பணியாற்றும் *16* இராசாயனவியலாளர்களில் *04* பேர் மாத்திரமே மேற்படி டிப்ளோமா பாடநெறியை கற்றுள்ளார்கள் என்பதும் குழுவில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

உலகில் அங்கீகரிக்கப்பட்ட மாணிக்கக் கற்கள் ஆய்வு நிறுவனங்களுக்கு (பிரித்தானிய மாணிக்கக் கற்கள் நிறுவனம் மற்றும் அமெரிக்காவில் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள்) பயிற்சித் திட்டங்களுக்கு அலுவலர்களை அனுப்ப வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாக குழுவினால் கவனம் செலுத்தப்பட்டதோடு அனுபவமிக்க தலைமை மதிப்பீட்டாளர்களின் உதவியுடன் கனிஷ்ட அலுவலர்களை பயிற்றுவிக்கும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கு தொடர் பயிற்சிகளை வழங்க வேண்டிய தேவையும் குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக, அதிகாரசபையின் அலுவலர்கள் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் பின்னர் அந் நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது FGA (Fellowship of Gemological Association) பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதோடு

அதற்கு வருடாந்தம் இரண்டு அலுவலர்களை அனுப்புவதற்கு அதிகாரசபை நிதி ஒதுக்கீடு செய்துள்ளமையும் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

<u>பொறுப்புக்கூறும் அலுவலருக்கு:</u>

1. ஆய்வகத்தில் பணியாற்றும் இரத்தினவியலாளர்களுக்கு **Fellowship of Gemological Association (FGA) Gemological Institute of America (GIA)** போன்ற டிப்ளோமா மற்றும் வெளிநாட்டு ஆய்வகமொன்றில் பயிற்சியை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

<u>விதப்புரையை நடைமுறைப்படுத்த வேண்டிய/பொறுப்பு வாய்ந்த அலுவர்கள்/ நிறுவனங்கள்</u>

செயலாளர் – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் – தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

<u>குழு விதப்புரைகளை நிறைவேற்றுவதில் அடைந்துள்ள முன்னேற்றம்</u>

விதப்புரைகளை நிறைவேற்றுவதில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து 2025.05.30 ஆம் திகதி வரை குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

17. 510 கிலோ கிறாம் நிறையுடைய Rough Sapphire Cluster மாணிக்கக்கல்

இது தொடர்பாக குழு கீழ் காணும் விடயங்களை அவதானித்துள்ளது.

- ✓ 510 கி.கி நிறையுடைய "Rough Sapphire Cluster" மாணிக்கக் கல் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் திகதியன்று 10,000,000 அமெரிக்க டொலர் அதாவது ரூ. 2,030,600,997 பெறுமதிக்கு உரிமையாளர் தயாரித்த விபரப் பட்டியலொன்றை அதிகாரசபையின் பணிப்பாளர் (மதிப்பீட்டு/இரத்தினவியலாளர்) அத்தாட்சிப்படுத்தியுள்ளாரென்பதும்,
- ✓ மாணிக்கக் கல்லை ஆய்வு செய்து அத்தாட்சிப்படுத்துவதற்கு சுவிட்சலாந்து நாட்டின் குப்லின் ஆய்வகத்துக்கு அனுப்பி 443 நாட்களுக்கு பின்னர் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆம் திகதி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதென்பதும்,
- ✓ ஆய்வு நடவடிக்கைகளுக்கு அனுப்பப்படும் மாணிக்கக் கற்கள் 150 நாட்களுக்குள் மீள இலங்கைக்கு கொண்டு வரப்படவில்லை எனில், விற்கப்பட்ட கற்களாக கருதி அதன் பெறுமதியில் 1% அபராதத் தொகை (10,000,000 US டொலருக்கு 1%) அறவிடப்பட வேண்டுமென்ற போதிலும் மேற்படி கல் விற்கப்படாத காரணத்தினாலும் விற்கப்படாத பொருள் மீது சுமார் 30 மில்லியன் ரூபாய்

சேவைக் கட்டணம் அறவிடப்படுவதன் மூலம் அந் நிறுவனம் வீழ்ச்சி அடையும் என்பதாலும் 2300 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆம் திகதியன்று பணிப்பாளர் சபைக்கு அறிவித்து செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை அறவிடாதிருப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் பெறுமதியில் 1% அபராதத் தொகை (10,000,000 US டொலர்) பின்னர் நிறுவனத் தலைவரின் தலையீட்டின் பேரில் நீக்கப்பட்டுள்ளதென்பதும்,

- ✓ 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 அம் திகதியன்று உரிமையாளரினால் குறித்த மாணிக்கக் கல் 10,700 அமெரிக்க டொலர் என விலை நிர்ணயிக்கப்பட்டு மீள ஏற்றுமதி செய்யப்பட்டது. இருப்பினும் அதிகாரசபையின் மதிப்பீட்டு/ இரத்தினவியலாளரினால் விலையின் நியாயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் முன்னைய மதிப்பீடு சவாலுக்கப்படுத்தப்பட்டதென்பதும்,

இந்த விடயம் குறித்து விளக்கமளித்த தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் மதிப்பீட்டாளர்/இரத்தினவியலாளர் பதவியில் கடமையாற்றி இன்றளவில் அப் பதவியை இராஜினாமா செய்துள்ள திரு துலிப் ஜயவர்தன பின்வரும் விடயங்களை தெரிவித்துள்ளார்.

- ✓ 510 கிலோ கிறாம் நிறையுடைய மாணிக்கக் கல்லை "பரிசோதித்து மீளக் கொண்டு வருதல்" (test and return) எனும் வகுதியின் கீழ் ஏற்றுமதி செய்வதற்கு மாணிக்கக் கல்லின் உரிமையாளர் சமர்ப்பித்த மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் காப்புறுதி செய்ய வேண்டியதன் தேவைக்காக முதலில் 10 மில்லியன் அமெரிக்க டொலர் தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டதென்பதும்,
- ✓ அது கின்னஸ் சாதனையை பெறுவதற்கு தகுதியானதாக கருதக்கூடிய அரிய வகை மாணிக்கக்கல் என்பதாலும் தான் அக் காலப்பகுதியில் இணையத்தின் ஊடாக பரிசீலித்த தகவல்களின் படி தொன்மையான பெறுமதியை கொண்டிருந்ததாலும் குறித்த கோப்பில் குறிப்பொன்றை வைத்து விட்டு சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர் சமர்ப்பித்த 10 மில்லியன் டொலர் தொகையையே தானும் மதிப்பீடு செய்தேனென்பதும்,
- ✓ சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர் சமர்ப்பித்திருந்த 10 மில்லியன் டொலர் மதிப்பீட்டை அவர் குறைத்திருப்பாரானால் மாணிக்கக் கல்லுக்கு யாதேனும் சேதமேற்படும் பட்சத்தில் காப்புறுதி உரித்து குறையுமென்பதும் மாணிக்கக் கல்லை விற்க முடிந்தால் நாட்டுக்கு கிடைக்க வேண்டிய வருமானமிழப்பு ஏற்படுவதை அவதானித்தேனென்பதும்
- ✓ உரிய 150 நாட்களை கடந்து 443 நாட்கள் அக் கல்லை வெளிநாட்டில் வைத்திருந்தமை தொடர்பாக தனக்கு பொறுப்பில்லை என்பதும்.

இதன் போது நிறுவனத்தின் புகழுக்கு பாதிப்பேற்பட்டுள்ளதாகவும் பல்வேறு மதிப்பீட்டு பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட்டமை தொடர்பாக தொழில்நுட்ப விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், பொது மக்களை தவறாக வழிநடத்தும் செயற்பாடு இடம் பெற்றுள்ளதென்பதே குழுவின் முடிவாகும்.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

<u>பிரதான பொறுப்பக்கூறும் அலுவலர் மற்றும் பொறுப்புக்கூறும் அலுவலருக்கு:</u>

I. **இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாத வகையில் நடவடிக்கை எடுத்தல்.**

<u>விதப்புரையை நடைமுறைப்படுத்த வேண்டிய/பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>

செயலாளர் – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் – தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

<u>குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றம்</u>

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து 2025.05.30 ஆம் திகதி வரை குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

18. <u>அதிகார சபையிடம் காணப்படுகின்ற பெறுமதியான உலோகங்களை பகுப்பாய்வு செய்வதற்கும் முத்திரையிடுவதற்கும் பயன்படுத்தப்படும் 06 Laser Marking இயந்திரங்கள் செயலிழந்துள்ளமை.</u>

- பெறுமதியான உலோகங்களை பகுப்பாய்வு செய்வதற்கும், முத்திரையிடுவதற்கும் பயன்படுத்தப்படும் ரூ.52,540,888 மதிப்புள்ள 04 Laser Marking இயந்திரங்கள் 2016 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும்,
- 2024 மார்ச் 15ஆந் திகதி முதல் அதிகாரசபையிடம் காணப்பட்ட 06 Laser Marking இயந்திரங்களும் செயலிழந்ததன் மீது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் Hallmarking மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும்,
- இந்த இயந்திரங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவை வழங்கல் (சர்விஸ்) தொடர்பில் சட்டரீதியான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படாமையால், இந்த

இயந்திரங்களை பயன்படுத்தப்படாமல் தொழிற்படாது வைத்திருக்க நேரிட்டதாகவும்,

- 2020 ஆம் ஆண்டில் இரண்டு Laser Marking இயந்திரங்களை கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தின் பிரகாரம், உற்பத்தி நிறுவனமானது இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட வெளிநாட்டுப் பயிற்சியை 04 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும்,
- இக்கொள்வனவு செலவு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ரூ.900,000 உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் செலவிவானது 2025 பெப்ரவரி 27ஆந் திகதி மீள அறவீடு செய்யப்பட்டுள்ளதை குழு அவதானித்தது.

19. <u>அதிகாரசபையின் ஆய்வுகூடத்தில் காணப்பட்ட இரண்டு FTIR இயந்திரங்களும் செயலிழந்துள்ளமை.</u>

இரத்தினக்கல் வெப்பப்பதப்படுத்தலுக்கு உள்ளானதா என்பதை அடையாளம் காண்பதற்குத் தேவையான இரண்டு **FTIR** இயந்திரங்களை இரத்தினபுரி மற்றும் பிரதான அலுவலகங்களுக்காக தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை 2013 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் மொத்தமாக ரூ. **16,379,110** செலவில்

கொள்வனவு செய்துள்ளதாகவும், இந்த இயந்திரமானது இரத்தினக்கற்களின் வெப்பத்தன்மையைக் கண்டறிவதற்கு அத்தியாவசியமாகக் காணப்படுவதாகவும், வெப்பப்படுத்தலானது கற்களின் பெறுமதியில் பாதிப்புச் செலுத்துவதால் குறிப்பாக கெவுடா (geuda) கற்களின் பெறுமதியை அதிகரிப்பதாகவும், அனுபவம் வாய்ந்த இரத்தினக்கல் துறைசார் நிபுணர்களுக்கு நுணுக்குக்காட்டியின் உதவியுடன் வெப்பத்தன்மையை ஓரளவிற்குக் கண்டறிய முடியும் என்றாலும், அது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சரியானதாகக் காணப்பட மாட்டாது எனவும், ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து இரத்தினக் கற்களும் வெப்பச் செயலாக்கத்திற்கு உட்படுத்தப்படுவதை உறுதி செய்வது அவசியம் என்றாலும், தற்போதைய சூழ்நிலையில் இது முறையாக மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையும் குழு அவதானித்தது.

இருப்பினும், இவ்விரு இயந்திரங்களும் தற்போது செயலற்ற நிலையில் காணப்படுவதோடு, இதுவொரு பாராதூரமான பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும், இரத்தினபுரி அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரத்தில் ஒரு பகுதி காணால் போனமையாலும் மற்றும் ஆய்வுகூட உத்தியோகத்தர்ளுக்கு முறையான பயிற்சி வழங்கப்படாமையாலும் 2013ஆம் ஆண்டிலிருந்து

பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுவதாகவும், காணாமல் போன பகுதியை அடையாளம் காண்பதற்கு 6 மாதங்கள் கடந்துள்ள போதிலும், இன்னும் அது கண்டுபிடிக்கப்படவில்லை எனவும், பிரதான அலுவலகத்தில் உள்ள இயந்திரத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை 7 சான்றிதழ்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது மழைநீர் படுவதன் காரணமாக செயலற்ற நிலையில் காணப்படுவதாகவும், இயந்திரக் கொள்வனவு ஒப்பந்தத்தின் பிரகாரம், இரண்டு உத்தியோகத்தர்களுக்கு உற்பத்தி நிறுவனத்தினால் வழங்குவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட விஷேட பயிற்சியும் 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இன்றுவரை வழங்கப்படவில்லை எனவும், இந்த இயந்திரங்களுக்கான சேவை ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், இயந்திரங்களை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அவை இன்னும் முழுமையான செயற்பாட்டு நிலைக்கு வரவில்லை எனவும், இந்த இயந்திரங்கள் முறையாக செயற்படாததால் சான்றிதழ்கள் வழங்கும் செயன்முறை தடைப்பட்டுள்ளதாகவும் குழுவில் வெளியானது.

ஒரு இயந்திரம் பிரதான அலுவலகத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டதாகவும், பின்னர் ஒரு இயந்திரம் இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், அதை எடுத்துச் செல்லும் போது அந்த

இயந்திரமானது இயங்கு நிலையில் காணப்பட்டதாகவும், பிரதான அலுவலகக் கட்டிடம் இடிந்து விழும் அபாயத்தின் காரணமாக இயந்திரத்தை கொள்வனவு செய்த நிறுவனத்திற்கே அனுப்பப்பட்டதாகவும், அங்கிருந்து இரத்தினபுரி அலுவலகத்திற்கு இயந்திரம் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டதாகவும், அதன் பின்னர் அந்த அலுவலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவரால் இயந்திரம் பொறுப்பேற்கப்பட்டதாகவும், பின்னர், சம்பந்தப்பட்ட முகவர் நிறுவனம் இரத்தினபுரி அலுவலகத்திற்குச் சென்று இயந்திரத்தை இயக்க தேவையான பணிகளை மேற்கொண்டபோது அதன் **"Pallet Pressing" இயந்திரப் பகுதி காணாமல் போயுள்ளதாக** அறிக்கையொன்றை வழங்கியுள்ளதாகவும், முகவர் நிறுவனம் வழங்கிய அறிக்கையின்படி, 2023.06.03 ஆந் திகதியளவில் தொடர்புடைய இயந்திரம் உரிய முறையில் இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டதால், இரத்தினபுரி அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் இயந்திரத்தில் இருந்த ஒரு பகுதி காணாமல் போயிருப்பது புலப்படுவதாகவும், ஒரு இயந்திரம் அண்ணளவாக ரூ. 88 இலட்சம் மதிப்புடையது என்பதாகவும் பணிப்பாளர்(மதிப்பீட்டாளர்/இரத்தினக்கல் நிபுணர்) தெரிவித்த விடயங்களை குழு கவனத்திற்கு உட்படுத்தியது.

இது தொடர்பில் அரச உத்தியோகத்தர் ஒருவரால் முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அந்த விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளின்படி, இயந்திரத்தை கொண்டு செல்வதில் விடயப்பொறுப்பு உத்தியோகத்தரும் அவரது அப்போதைய மேற்பார்வை உத்தியோகத்தரும் பொறுப்புக் கூற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அதன்படி, தலைவரின் கையொப்பத்தின் கீழ் விடயப்பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்ட போதிலும், அவர் இயந்திரத்தை வாகனத்தில் கொண்டு செல்வது தொடர்பான பணிகளை மட்டுமே செய்திருந்தமையால், இயந்திரத்தின் எவ்விதப் பாகங்களையும் தான் கழற்றவில்லை என்பதாக அவர் முன்வைத்த தகவல்களின் அடிப்படையில் விசாரணைக்கு உட்படுத்தியதன் பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரி அச்சந்தர்ப்பத்தில் விடுவிக்கப்பட்டதாகவும், இது தொடர்பாக அதிகாரசபைக்கு மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையேற்பட்டதனால், அடுத்தகட்ட விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கைத்தொழில் அமைச்சிலிருந்து பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு அதிகாரசபை அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் குழுவிற்கு தெரியவந்தது.

இந்த நிலைமை குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளதோடு, ரூ.166 இலட்சம் அரச நிதிச் செலவில் சம்பந்தப்பட்ட இயந்திரங்களை கொள்வனவு செய்து, பின்னர் அந்த இயந்திரங்களை பயன்படுத்தாதுள்ள இத்தகைய நிலைமைகளை உடன் அமுலுக்கு வரும் வகையில்

முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என குழு வலியுறுத்தியது.

<u>**குழுவின் பரிந்துரை**</u>

<u>**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும்;**</u>

I. தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் இரத்தினபுரி அலுவலகத்தில் பொறுத்தப்பட்டுள்ள **FTIR** இயந்திரத்தில் ஒரு பகுதி காணாமல் போனமை குறித்து அமைச்சு மட்டத்தில் சுயாதீன விசாரணைக் குழுவொன்றை நியமித்து முறையான விசாரணையை மேற்கொண்டு, பொறுப்புக்கூற வேண்டிய அனைத்து அதிகாரிகளையும் அடையாளம் காணுதல் மற்றும் தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அது குறித்து **01** மாத காலத்திற்குள் அறிக்கையொன்றை **(2025.04.05**ஆந் திகதிக்கு முன்னர்**)** கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் கூடியதாக குழுவில் சமர்ப்பித்தல்.

II. தொடர்புடைய இயந்திரத்தை பாவனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் தயாரித்தல்.

<u>பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>

செயலாளர் – கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் – தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை

<u>குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம்</u>

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் MOIED/EDD/ADM/ES/02/06 ஆம் இலக்க மற்றும் 2025.05.29 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் இரத்தினபுரி அலுவலத்தில் பொறுத்தப்பட்டுள்ள FTIR இயந்திரத்தின் பகுதியொன்று காணாமல் போயுள்ளமை தொடர்பாக அமைச்சு மட்டத்தில் சுயாதீன குழுவொன்றை நியமித்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. அதில் இந்த விடயம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களையும் அடையாளம் காணுதல் தொடர்பில் எவ்விதப் பதிவுகளும் குறிப்பிடப்படவில்லை.

20. <u>இரத்தினக்கல் தொழிற்றுறையின் ஒழுங்குமுறை மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை</u>

இரத்தினக்கல் தொழில்துறையின் ஒழுங்குமுறை மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையை தொடர்பில் 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 15(8) ஆம் பிரிவின் படி, மாணிக்கக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், விண்ணப்பதாரர் 30 நாட்களுக்குள் குறித்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடொன்றை சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளதென குழுவின் அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பாக தகவல் அளித்த கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை (NGJA) சரியானதொரு முறையியலை தயாரித்து, சட்டரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து பரிசோதிப்புக்களையும் மேற்கொண்டு, இரத்தினக்கல் அகழ்வு விண்ணப்பங்களுக்கு முறையாக ஒப்புதல் அளித்தால், அனுமதிப்பத்திர விண்ணப்பம் நிராகரிக்கப்படும் வேளையில் சட்டத்தின் 15(8)ஆம் பிரிவின் பிரகாரம் மேன்முறையீடொன்றை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை என மேலும் தெரிவித்தார்.

இருப்பினும், மாணிக்கக்கல் அகழ்வுக்கான அனைத்து விண்ணப்பங்களும், நடைமுறைகளை

முறையாக மேற்கொள்ளத் தவறியதால் நிராகரிக்கப்படுவது தொடர்பாக அமைச்சின் செயலாளரிடம் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்படுவதாகவும், அவற்றை பரீட்சிப்பதற்கு அதிக காலத்தை செலவிட வேண்டியேற்படுவதாகவும், இதற்காக அமைச்சின் சட்டப் பிரிவின் உதவி பெறப்படுவதாகவும் குழு வெளிப்படுத்தியது.

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை தொடர்பில் 2025.03.05 ஆந் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தின்போது வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு மேலதிகமாக, பின்வரும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழு பரிந்துரை செய்தது.

<u>குழுவின் பரிந்துரை</u>
<u>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு:</u>

I. சட்டத்தை திருத்தும்போது அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யும் இந்த அதிகாரத்தை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வதன் அவசியத்தை மறுபரிசீலனை செய்தல்.

தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அது தொடர்பான அறிக்கையொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்

<u>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும்:</u>

II. இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதை **100%** சரிசெய்வதற்கும் மற்றும் பொதுமனுக்கள், ஆட்சேபனைகளைக் குறைப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது மற்றும் அது குறித்த அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் **01** மாத காலத்திற்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.

III. இது தொடர்பில் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் **1993** ஆம் ஆண்டின் **50** ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைச் சட்ட திருத்தத்தின்போது உள்ளீடுசெய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வேளையில் அது குறித்த அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதிகள் சகிதம் குழுவிடம் சமர்ப்பித்தல்.

<u>பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>

செயலாளர் – கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு
தலைவர் – தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை

<u>குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்</u>

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் 2025.05.30 ஆந் திகதி வரையில் குழுவிடம் தெரிவிக்கப்படவில்லை.

21. <u>ஹெரணியாவக்க மாணிக்கக்கல் படிவுகளை அகற்றிக்கொள்வதற்கான கருத்திட்டம்.</u>

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் கீழ் இயங்கும் இரத்தினபுரி மாவட்டத்தின் கிரிஎல்ல மற்றும் அயகம பிரதேச செயலகப் பிரிவுகள் வழியாகப் பாய்ந்தோடும் களுகங்கையின், கலதுரு மற்றும் களுகங்கையுடன் இணையும் ஆழமான நீர்ப்பகுதியான ஹெரணியாவக்கவிற்கு அருகிலுள்ள நில அளவை வரைபட இலக்கம் 515 ஐக் கொண்ட திட்டத்துடன் தொடர்புடைய ஆற்றுப் பகுதியில் உள்ள இரத்தினக்கல் படிவுகளை அகற்றிக்கொள்வதற்கான கருத்திட்டம் தொடர்பாக Lotus International Trade (Pvt) Ltd நிறுவனம் 2025.03.04 ஆந் திகதி குழுவிடம் சமர்ப்பித்த சத்தியக்கடதாசியில் (இணைப்பு 02) குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் குழு அவதானம் செலுத்தியது.

இந்தக் கருத்திட்டத்திற்கான பகிரங்க போட்டித்தன்மைமிக்க கேள்விமனுக் கோரலின் போது, வரைபட இலக்கம் 515 உடன் தொடர்புடைய 25% பகுதிக்கான உரிமைக்காக 2017 ஆம் ஆண்டில் அதற்கான உரிய வரித்தொகை உள்ளடங்கலாக ரூ. 1400 இலட்சம் (ரூ. 140,000,000) அளவிலான அதிகபட்ச கூறுவிலை வைக்கப்பட்டு, அந்தப் பணத்தை 2020ஆம் ஆண்டில் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும், 2017இல் இக்கருத்திட்டத்தைத் தொடங்குவதற்காக, 2017இல் கேள்விமனுக் கோரல் கோரப்பட்ட போதிலும், 2021ஆம் ஆண்டு வரையில் பணிகளை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கவில்லை எனவும், 2017ஆம் ஆண்டளவில், இந்தப் பிரதேசம் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைகளுக்கு அதிகளவில் உட்பட்டிருந்ததாகவும், ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் 20-25 படகுகளைப் பயன்படுத்தி சட்டவிரோதமான அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளதாகவும், அங்கு இரத்தினக்கல் நிலங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு முயற்சிக்கப்பட்ட போதிலலும், சமூகத்தில் நிலவிய கடுமையான எதிர்ப்பு மற்றும் சிக்கலான சூழ்நிலை காரணமாக, 100% இரத்தினக்கல் நில ஏல விற்பனைக்கு நேரடியாகச் செல்ல முடியாமல் போயுள்ளதாகவும், அச்சந்தர்ப்பத்தில், ஆற்றின் இருபுறமும்

வசித்துவந்த அனைத்து சமுர்த்தி பயனாளி சங்கங்களையும் தொடர்புபடுத்தி அவர்களுக்கும் பயன்கள் கிடைக்கும் வகையில் திட்டமிட்டு, கேள்விமனுக் கோரலுக்காக வரைபட இலக்கம் 515 இன் 200 மீற்றர் எல்லை தெரிவுசெய்யப்பட்டதாகவும், இங்கு கிடைக்கின்ற இரத்தினக்கல் பெறுமதியிலிருந்து, 400 சமுர்த்தி குடும்பங்கள், 06 சமுர்த்தி சங்கங்கள் ஊடாக அந்தக் குடும்பங்களுக்கு 25% பயன்களையும், 50% அரச பங்காக தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைக்கும் மற்றும் தொடர்புடைய நிறுவனத்திற்கு 25% பயன்களும் கிடைக்கும் வகையில் பகிரங்க கேள்விமனுக் கோரல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குழுவிற்கு தெரியவந்தது.

பொதுவாக, 100% ஏலம் விடப்படும் சந்தர்ப்பங்களில், ஒரு வருட காலத்திற்கு இரத்தினக் கல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படுகின்ற போதிலும், இந்தக் கருத்திட்டத்தில், 100% ஏலம் விடப்படவில்லை எனவும், வரைபட இலக்கம் 515 க்கு மட்டுமே, மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் கீழ் கேள்விமனுக் கோரப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ச்சியாக தொழிற்றுறையை முன்னெடுத்துச் செல்வதற்கு அதிகாரசபையின் பணிப்பாளர்கள் சபையின் ஒப்புதலின்படி, ஆண்டுதோறும் நீடித்துக்கொள்ளக்கூடிய வகையில் ஒப்பந்தத்தில் உள்ளீடுசெய்து விளம்பரப்படுத்தியதாகவும், அந்தத்

தரப்பினர் சரியாகச் செயற்படும் பட்சத்தில், எதிர்காலத்தில் கோரிக்கை விடுத்து, அதிகாரசபையின் ஒப்புதலைப் பெற்று, அதை செயற்படுத்த வாய்ப்பு உள்ளது என்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், சட்டவிரோதமான அகழ்வினைக் கட்டுப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில், 2016 டிசம்பரில் சனாதிபதி செயலகத்தின் மூலம் நடாத்தப்பட்ட விஷேட கலந்துரையாடலில் எடுக்கப்பட்டதொரு வழிகாட்டல் உள்ளதெனவும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில், அமைச்சின் செயலாளர் சுற்றாடல் அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் தொடர்புடைய அனைத்து அரச நிறுவனங்களையும் உள்ளடக்கியதொரு குழுவை நியமித்து, அந்தக் குழுவை கண்காணிப்புக் குழுவாகப் பயன்படுத்தி, சமகால நிலைமைகளைக் கண்காணித்து, அதிகாரசபையின் முழுக் கண்காணிப்பின் கீழ் இரத்தினக்கல் வளங்களை அகற்றிக்கொள்வதற்கு, அதாவது சட்டரீதியற்ற அகழ்வுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான வேலைத்திட்டம் அந்த வழிகாட்டுதலில் குறிப்பிடப்பட்டுள்ளதையும் குழு கவனித்தது.

அதன்படி, இந்தக் கருத்திட்டம் தொடர்பாக Lotus International Trade (Pvt) Ltd மற்றும் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையுடன் முதலாவது ஒப்பந்தம் 2021ஆம் ஆண்டு அதிகாரசபையின் அப்போதைய தலைவர் திலக் வீரசிங்கவுடன் ஒரு வருட காலத்திற்கு

கைச்சாத்திடப்பட்டது என்பதும், அந்த ஒப்பந்தம் காலாவதியான பின்னர், அதனோடு தொடர்புடைய இரண்டாவது ஒப்பந்தம் அடுத்துவரும் 06 மாத காலத்திற்கு அதே தலைவருடனேயே கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு, அதன் பின்னர், 2022.07.24 தொடக்கம் 03 தடவைகளில் தலா 06 மாத காலத்திற்கு மூன்று ஒப்பந்தங்களுக்கு அப்போதைய தலைவர் விராஜ் டி சில்வாவுடன் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் 2023.12.31 ஆந் திகதி தொடக்கம் அந்த ஒப்பந்தங்களின் நடைமுறை காலம் காலாவதியான பின்னர், அதன் நீட்டிப்புக்கு தொடர்புடைய அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதோடு, அன்று தொடக்கம் இன்று வரையில் அந்தக் கருத்திட்டம் தொடர்பான புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பாக தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையினால் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரியவந்தது. இது தொடர்பாக, பல சந்தர்ப்பங்களில் (சுமார் 05 தடவைகளில்) சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், இதுவரை எந்தவிட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என குழுவிற்கு தெரியவந்தது.

புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து அப்போதைய தலைவர் விராஜ் டி சில்வாவிடம் வினவியபோது, அதற்கு

அதிகாரசபைக்குப் பொறுப்பான அப்போதைய இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். இது தொடர்பாக இராஜாங்க அமைச்சரிடம் வினவியபோது, அந்தப் புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டுமெனில், அதற்கு அவரது தேர்தல் தொகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி மற்றும் அதனோடு இணைந்த கருத்திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து பங்களிக்க வேண்டும் என பதிலளித்துள்ளார். அத்தகைய கோரிக்கையானது மேற்படி கருத்திட்டத்திற்கு பொருத்தமானதல்ல என்கின்ற நிலைமைக்குள் மற்றும் தொடர்புடைய கருத்திட்டத்திற்கு அதிக பணத்தை முதலீடு செய்துள்ள போதிலும், சம்பந்தப்பட்ட நிறுவனம் பல சந்தர்ப்பங்களில் இராஜாங்க அமைச்சரின் கோரிக்கைகளை நிறைவேற்ற பங்களித்த போதிலும், எல்லை மீறிய கோரிக்கைகளை வணிக நெறிமுறைகள் மற்றும் தார்மீகக் கொள்கைகளுக்கு இணங்க சம்பந்தப்பட்ட நிறுவனம் நிராகரித்ததாகவும், இந்தத் திட்டம் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட அனுமதிக்காததற்கு இதுவே காரணம் என்றும், அது நிறுவனத்தின் உறுதியான நம்பிக்கை என்பதனையும் குழு கவனித்தது.

இதுவரை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடாமை குறித்து குழு வினவியபோது, தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் முன்னாள் தலைவரும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருமான விராஜ் டி சில்வா, 2024 ஜனவரி 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 2426 உடைய

பணிப்பாளர் சபை பத்திரமொன்றின் மூலம் இந்தக் கருத்திட்டத்தை மேலும் 06 மாத காலங்களுக்கு நீட்டிக்க முன்மொழிந்ததாகவும், அந்த முன்மொழிவைச் சமர்ப்பித்த பின்னர், இந்த திட்டத்தின் உண்மையான நிலை குறித்து சபை ஒரு கலந்துரையாடலை நடத்தியதாகவும், அவர்களின் பதவிக்காலத்தில் தலா மூன்று மாதங்களுக்கு இந்த நீடிப்பு செய்யப்பட்டதாகவும், அந்த ஒரு காலகட்டத்திலேனும் இரத்தினக் கற்கள் ஏலம் நடத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரத்தினக்கல் ஏலம் நடத்தப்படாததால், இதன்பின்னர் மேலும் இந்தக் கருத்திட்டத்தின் காலத்தை நீடிக்காமல் இருப்பதற்கு முடிவு செய்யப்பட்டதாகவும், அச்சபைக் கூட்டத்தின் அறிக்கை தன்னிடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நிதி அமைச்சின் பிரதிநிதியும் இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதியும் புதிய ஏலங்களை கோருவதற்கான நடைமுறைகளை தொடர்புடைய ஒப்பந்தத்தின் கால நீடிப்பு முடிவதற்குள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும், தற்போதைய ஒப்பந்தத்தை மேலும் நீடிக்காமல் இருப்பது என்பது சபை இறுதியாக எடுத்த தீர்மானம் எனவும் பணிப்பாளர் சபையின் ஒப்புதலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெரணியாவக்க ஒப்பந்த காலம்

பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள திகதி	பணிப்பாளர் சபையின் ஒப்புதல் கிடைத்த திகதி	பணிப்பாளர் சபை பத்திர இலக்கம்	ஒப்பந்த காலம்	ஒப்பந்த காலம்	தொடர்புடைய காலப்பகுதியில் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கை
2020.08.31	2020.09.03	2026	வருடம் 01	2021.01.21-2022.01.20	114
2022.01.24	2022.02.02	2158	மாதம் 06	2022.01.25 - 2022.07.24	59
2022.06.28	2022.07.28	2205	மாதம் 06	2022.07.24 - 2023.01.23	70
2022.12.13	2022.12.19	2250	மாதம் 06	2022.11.29 - 2023.05.31	
2023.05.30	2023.07.05	2319	மாதம் 06	2023.06.01 - 2023.12.31	21
2024.01.31	2024.01.31	2426	மாதம் 06	கையொப்பமிடப்படவில்லை.	-
உரிய காலப்பகுதியில் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த நாட்களின் எண்ணிக்கை					**264**

ஏல விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ள தடவைகள்

தொடர் இலக்கம் ச்ஙை	ஏலவிற்பனை திகதி	ஏல விற்பனை வருமானம் (ரூ) **(2.5% இன்ற)**	ஏல விறபனை வருமானம் (ரு.) **(2.5%** மொத்தம் வரி சேஓுத்தி ய பின்	அரச பங்கு **(50%)**	**Lotus International Trade (Pvt) Ltd (25%)**	சமுராத்தி சங்கம் **(25%)**
1.	2021. 04.05	27,559,008.88	26,870,033.66	28,662,106.25	14,331,053.13	14,331,053.13
2.	2021. 07.29	39,659,261.61	38,667,780.07			
3.	2022. 02.24	54,366,996.80	53,007,821.88	21,158,278.79	10,579,139.40	10,579,139.40
4.	2022. 08.08	13,592,887.99	13,253,065.79	3,908,506.90	1,954,253.45	1,954,253.45
மொத்தம்		**135,178,155.28**	**131,798,701.40**	**53,728,89.94**	**26,864,445.98**	**26,864,445.98**
இந்த 04வது ஏலத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட இரத்தினக் கற்கள் இதுவரை ஏலத்திற்கு விடப்படவில்லை என்றும், வங்கிப் பெட்டகங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை தெரிவித்துள்ளது.						

(குழுக் கூட்டத்தில் குறிப்பிடப்பட்ட இந்தத் தகவல்களும் மற்றும் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையால் 02.04.2025 அன்று குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களும் ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.)

இருப்பினும், தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர், (காணி, அகழ்வு மற்றும் சுற்றாடல்) இதுவரை நான்கு தடவைகளில் ஏலங்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும், மற்றொரு ஏலத்தை நடத்த போதுமான இரத்தினக்கற்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். போதுமான இரத்தினக்கற்கள் சேகரிக்கப்படும் வரை ஏலங்கள் ஒத்திவைக்கப்பட்டதாகவும், ஏலத்திற்கான செலவை (பொதுவாக சுமார் ஒரு

மில்லியன்) கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். முந்தைய ஏலங்களில் குறைந்தது 20 மில்லியன் இரத்தினக்கற்கள் ஏலம் விடப்பட்டுள்ளன என்றும், கடந்த இரண்டு தடவைகளிலும் மிகக் குறைந்த நாட்களே பணியாற்றியுள்ளதாகவும், அடுத்த திட்டத்தை ஆம்பித்து கிடைக்கின்ற இரத்தினக்கற்களைச் சேகரித்து ஒரே நேரத்தில் ஏலம் நடத்தும் நோக்கத்துடன் எந்த ஏலமும் நடத்தப்படவில்லை என்றும், பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னாள் தவிசாளர் அவ்வாறு தெரிவித்த போதிலும், களு கங்கையும், கலதுரு கங்கையும் களு கங்கையில் சேருகின்ற நீர்ச்சுழி /பெருநீர் ஆழ வளைவு தோன்றும் இடத்தை அண்மித்த நில அளவை வரைபட இலக்கம் 515 இற்குரிய கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டில் மேலும் 06 மாத காலத்திற்கு நடைமுறைப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைத்துள்ளமையால் இதற்குரிய ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமெனவும், இதற்காக தவிசாளரை தொடர்பு கொண்டு பொருத்தமான திகதியையும் நேரத்தையும் முன்பதிவு செய்து தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் பிரதான அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டுமென முன்னாள் தவிசாளரின்

கையொப்பமிடப்பட்ட கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் (காணி, அகழ்வு மற்றும் சுற்றாடல்) தெரிவித்தார்.

இவ்விடயம் பற்றி கருத்துரைத்த தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் முன்னாள் தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. விராஜ் த சில்வா, 2024.01.31 ஆம் திகதிய பணிப்பாளர் சபை அனுமதி மூலம் அடுத்த 06 மாதங்களுக்கு ஒப்பந்தத்தை நீடிப்பதற்கும், அதன்பின்னர், இவ்வொப்பந்தத்தை நீடிக்காமலிருப்பதற்கும் பணிப்பாளர் சபை தீர்மானித்ததாகவும், குறித்த நிறுவனத்தினால் ஒப்பந்தத்தை கைச்சாத்திட இணங்கிய குறித்த சமுர்த்தி சங்கத்துடன் செயற்பட முடியாதென தெரிவிக்கப்பட்டமையால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை எனவும் தெரிவித்தார். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நீடிப்பதற்கான இணக்கப்பாடு 2022 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டடுள்ளதை குழு அவதானித்தது. தற்சமயம் மூன்றாவது முறையாக நீடிப்பதற்காக 06 கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் 4 முறை மாத்திரமே

கைச்சாத்திடப்பட்டதாகவும், அது புதிய ஒப்பந்தமே தவிர நீடிப்பு இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

இரத்தினக்கல் பகிரங்க ஏலவிற்பனையின் ஊடாக விற்பனை செய்யப்படுவதாகவும், முதலில் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, கிடைக்கும் இரத்தினக்கல் அனைத்து தரப்பினர் முன்னிலையிலும் முத்திரை இடப்பட்டு வங்கியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு அதனையடுத்து போதுமானளவு இரத்தினக்கல் கிடைத்த பின்னர், பகிரங்க பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக அறிவிக்கப்பட்டு மதீப்பீட்டு குழு மற்றும் கருத்திட்ட தரப்பினரின் பங்களிப்புடன் மதீப்பீடு செய்யப்பட்டு தனித்தனி பொதிகளாக பிரிக்கப்பட்டு பகிரங்க ஏல விற்பனையின் ஊடாக இரத்தினக்கல் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

40 மீற்றர் ஆழத்தில் காணப்படுகின்ற படிமத்தை மேற்பரப்பிற்கு கொண்டு வரவேண்டியுள்ளமையால் தற்போதைய காலநிலை நிலவரங்கள் காரணமாக இற்றைவரையில் 50% ஐ கூட எடுக்க முடியாதுள்ளதாகவும், எனவே இக்கருத்திட்டத்தின் காலத்தை நீடிக்க வேண்டிய கட்டாயம் காணப்படுவதாகவும், இதனை

தெளிவாக உறுதிப்படுத்த முடியுமெனவும் பணிப்பாளர் (காணி, அகழ்வு மற்றும் சுற்றாடல்) தெரிவித்தார்.

இக்கருத்திட்டத்தின் கீழ் 25% ஆன சமுர்த்தி பயனாளிகளுக்கு உதவித்தொகை செலுத்துவது சம்பந்தமாக பிரச்சினைகள் காணப்படுவதை குழு அவதானித்தது. சமுர்த்தி சங்கங்களுக்கு காசோலைகளை வழங்க வேண்டிய நிலையில் தனிப்பட்ட நபர்களின் பெயர்களுக்கு 125 இலட்சம் ரூபா வரை காசோலைகள் மூலம் பண பரிமாற்றம் செய்ய அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருப்பதாக கணக்காய்வு அவதானிப்புகள் இந்நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் தலைமையதிபதி தெரிவித்தார். இக்கொடுப்பனவுகளுக்காக உரிய நிதி விழுமியங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லையெனவும், குறிப்பிட்ட சங்கமொன்றிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை தனிப்பட்ட நபர்களின் கணக்குகளுக்கு செலுத்துதல் சட்டவிரோத செயலாகுமெனவும் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி இவ்விடயம் பற்றிய கணக்காய்வு விசாரணை

அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதாக அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வாளர் தெரிவித்ததாகவும், இதன் மூலம் கருத்திட்டத்தில் பங்குபற்றிய 06 சமுர்த்தி சனசமூக அமைப்புகளுக்கு உதவித்தொகைகளை செலுத்தும் போது அதிகாரசபை சமுர்த்தி சங்கங்களின் பெயர்களுக்கு காசோலைகளை எழுத வேண்டிய நிலையில், கிரிஎல்ல, அயகம சமுர்த்தி சங்கங்களின் நான்கு உத்தியோகத்தர்களின் சொந்த பெயரில் கிரிஎல்ல இலங்கை வங்கி கிளையில் பேணப்படும் இரண்டு கூட்டு கணக்குகளுக்கு 12.5 மில்லியன் ரூபா பணத்தை பரிமாற்றுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளமை கணக்காய்வு விசாரணைக்கு உட்பட்டிருந்தது. குறித்த சமுர்த்தி சங்கங்களின் கோரிக்கைக்கு அமைவாக அதிகாரசபையின் தவிசாளரின் அனுமதியின் கீழ் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதாகவும், இக்கணக்காய்வு விசாரணை கிடைக்கப்பெற்ற பின்னர் குறித்த தவறு திருத்தப்பட்டு குறித்த சமுர்த்தி வங்கியின் பெயரில் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அரச பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்கள் நிதி முகாமைத்துவம் தொடர்பில் முறையான அறிவைக் கொண்டிருக்க வேண்டிய மேற்படி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளுக்கு ஏற்ப இவ்வாறான நிலைமைகள் ஏற்படாமலிருக்க கவனமாக இருக்க வேண்டுமென சுட்டிக்காட்டிய

கணக்காய்வாளர் தலைமையதிபதி, தமது சொந்த கணக்காய்வு அவதானிப்புகளின் பின்னர் திருத்துதல் போதுமானதல்லவெனவும், தவறான முறையில் செலுத்தப்பட்ட 125 இலட்சம் ரூபா தொடர்பில் பொறுப்பிலிருந்து விலக முடியாதெனவும், மேற்படி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் மற்றும் அந்நிலைமைகளை சாதாரண விடயமாக கருதி விளக்கமளித்தமை பற்றி குழு கடுமையான அதிருப்தியை வெளியிட்டது.

சட்டமா அதிபரின் ஆசோனைகள் கிடைத்தமை தொடர்பில் கருத்துரைத்த அதிகார சபையின் உதவி பணிப்பாளர் (சட்டம்) குறிப்பிடுகையில், 2019 ஆம் ஆண்டில் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து 02 ஆசோனைகள் கிடைத்ததாகவும், அவை அரச காணிகளில் இரத்தினக்கல் அகழ்விற்கான உரிமையை கையளித்தல் பற்றியதாகுமெனவும், இதன் மூலம், சட்டத்தின் 14 (1) (ஏ) உப பிரிவின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சட்டத்தின் 18 ஆம் பிரிவு (அரச உரிமக் கட்டணம்) தொடர்பில் சட்டமா அதிபரிடமிருந்து மற்றுமொரு ஆலோசனை கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். 1993

ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை சட்டத்தின் படி அனுமதிப்பத்திரம் வழங்கப்படக்கூடிய உச்ச காலவரையறை 01 ஆண்டாகுமெனவும் அவர் தெரவித்தார்.

வழக்கப்படி அதிகாரசபையினால் விலைமனு கோரப்பட்டு பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்ட பின்னர், குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு சகல ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டு சபை அனுமதி பெறப்பட்ட பின்னர் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு குறைகளை ஆராய்வதற்கும் ஒபந்தங்களின் சட்டபூர்வ தன்மையை ஆராய்வதற்கும் அவரிடம் சமர்ப்பிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த அனைத்து விடயங்களையும் அவதானித்த குழு ஹெரணியவக்க இரத்தினக்கல் படிமத்தை மீளப் பெறுவது தொடர்பாக 2024.01.31 ஆம் திகதி வரை அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து திருப்தி அடைந்ததுடன், 2024.01.31 ஆம் திகதிய பணிப்பாளர் சபை பத்திர அனுமதி இலக்கம் 2426 ஊடாக கிடைத்த போதிலும், இற்றைவரையில் Lotus International Trade (Pvt) Ltd நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து

கொள்ளாததற்கான காரணங்கள் கோரப்பட்டுள்ளன. அத்துடன், களு கங்கையும், கலதுரு கங்கையும் களு கங்கையில் சேருகின்ற நீர்ச்சுழி /பெருநீர் ஆழ வளைவு தோன்றும் இடத்தை அண்மித்த நில அளவை வரைபட இலக்கம் 515 இற்குரிய கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டில் மேலும் 06 மாத காலத்திற்கு நடைமுறைப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைத்துள்ளது. இதன்படி, ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், ஒப்பந்தம் ஏன் கைச்சாத்திடப்படவில்லை? என்ற கேள்வி எழுவதை குழு மேலும் அவதானித்தது.

குழுவின் விதப்புரை

பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்:

I. **ஹெரினியாவக்க இரத்தினக்கல் சுரங்க கருத்திட்டத்தில் கைச்சாத்திடல் மற்றும் ஒப்பந்தத்தை நீடித்தல் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் படி சட்டபூர்வ தன்மைக்கு ஏற்றதாகவும் முறையாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்த சகல விடயங்கள் பற்றிய அறிக்கையொன்று 01 மாதத்திற்குள்**

கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கான பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.

II. **2024.01.31 ஆம் திகதிய பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 2426 இன் ஊடாக வழங்கப்பட்டிருந்த அனுமதிக்கு இணங்க, குறித்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு 2024.04.08 ஆந் திகதி குறிப்பிட்ட Lotus International Trade (Pvt) Ltd நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்ட பின்னர், நீண்ட காலமாக குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமை தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தி, இதற்கு பொறுப்பான அனைத்து அதிகாரிகள் மீதும் தகுந்த ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் இவ்விடயம் பற்றிய அறிக்கையை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கான பிரதியுடன் 01 மாதத்திற்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.**

III. **இக்கருத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி சங்கங்களுக்கு கிடைக்க வேண்டிய 25%**

உதவித்தொகையை, செலவினை ஏற்கும் தரப்பினருக்கு/தனிப்பட்ட நபர்களின் பெயர்களுக்கு அதிகாரசபை காசோலைகளை வழங்கியமை சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அடங்கிய அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கான பிரதியுடன் 01 மாத காலத்திற்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.

1. இக்கொடுப்பனவுகளுக்கு அதிகாரமளித்தல், விதப்புரை வழங்குதல், செலவுகளை உறுதிப்படுத்துதல், அனுமதி வழங்குதல், கொடுப்பனவுகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்களின் தகவல்கள்,
2. இக்கொடுப்பனவுகளுக்கு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் அனுமதி கிடைத்துள்ளதா என்பது பற்றிய விபரங்கள்,
3. மேற்கண்டவாறு தனிப்பட்ட நபர்களின் பெயர்களுக்கு காசோலைகளை வழங்குதல் நிதிப் பிரமாணங்களை மீறும் செயலாகுமென கணக்காய்வாளரினால்

சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் அன்று வரை தனிப்பட்ட பெயர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காசோலைகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்,

4. குறித்த தொகையை தனது பெயருக்கு காசோலையாகப் பெற்ற நபரிடமிருந்து குறித்த சமுர்த்தி பயனாளிகளிக்கு கிடைத்ததாக உறுதிப்படுத்தப்பட்டதா எனவும் அதனை மீண்டும் சான்றுப்படுத்துவதற்கு விசாரணையை நடத்துதல் மற்றும் அதன் அறிக்கைகள்,
5. இவ்வாறான தவறுகள் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையில் மீண்டும் இடம்பெறாமலிருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்,

6.. இவ்விடயம் தொடர்பில் குறிப்பிட்ட தவறிழைத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட்டவுள்ள நடவடிக்கைகள்

7. மேற்படி செயல்முறை சம்பந்தமாக கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் இடம்பெற்ற அனைத்து ஊழல்

மோசடிகள் பற்றி விசாரணையை நடத்துதல்,

<u>குழுவின் செயலாளருக்கு:</u>

iv. பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்டு அனுப்பிய இவ்விசாரணை அறிக்கையை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல்.

<u>கணக்கீட்டு அலுவலருக்கு:</u>

v. ஹெரனியாவக இரத்தினக்கல் சுரங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகள் சம்பந்தமாக துரிதமாக அவசியமாகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அதன் பாதுகாப்பு தொடர்பில் காணப்படுகின்ற தடைகள் சம்பந்தமாக 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சட்டத்திற்கு அமைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அது சம்பந்தமான பொழிப்பு அறிக்கையொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான

பிரதி சகிதம் குழுவுக்கு 01 மாத காலப்பகுதிக்குள் சமர்ப்பித்தல்.

<u>கணக்கீட்டு அலுவலருக்கும், மற்றும் அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளருக்கும் (சட்டம்);</u>

vi. அதிகாரசபையினால் உரிமம் வழங்கப்பட முன்னர், உடன்படிக்கை செய்துகொள்ள முன்னர், விலை மனுக்களை கோர முன்னர், பத்திரிகை அறிவித்தலை வெளியிட முன்னர் மேற்படி உரிமம், அறிவித்தல் மற்றும் உடன்படிக்கையின் வரைவை அதிகாரசபையின் சட்டப் பிரிவிடம் சமர்ப்பித்து அவற்றின் சட்டபூர்வமான தன்மை பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல், உரிய பொறுப்புவாய்ந்த அலுவலர்களுக்கு மேற்படி கடமைகளை பொறுப்பளித்தல், மேற்படி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளல், அது தொடர்பில்

ஆலோசனை வழங்குதல் மற்றும் குறித்த செயன்முறையை தொடர்ச்சியாக அமுல்படுத்தல் மற்றும் அது தொடர்பில் உரிய மாதிரிப்படிவத்திற்கமைய அறிக்கைகளை பேணிவருதல்.

vii மேற்படி தயார் செய்யப்பட்ட உரிய முறையியல் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதி சகிதம் 01 மாத காலப்பகுதிக்குள் குழுவிடம் சமர்ப்பித்தல். அதன் தொடர்ச்சியான செயற்பாடு தொடர்பாக வருடாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதி சகிதம் குழுவுக்கு அறிவித்தல்.

<u>விதப்புரையை அமுல்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>

செயலாளர், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தவிசாளர், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

செயலாளர், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு

உதவிப் பணிப்பாளர் (சட்டம்), தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

<u>குழுவின் விதப்புரையை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்</u>

விதப்புரையை அமுல்படுத்துவதன் முன்னேற்றம் 2025.05.30 ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

22. <u>2024.02.09 ஆம் திகதி நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்</u>

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் அலுவலகத்தில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போது, உரிமம் வெளியிடுகையில் கூடுதல் கவனம் செலுத்துமாறு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என்றும், பொது மக்களின் முறைப்பாடுகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டதென்றும், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் (அமுல்படுத்தல் மற்றும் பிரதேச அபிவிருத்தி) தெரிவித்தார். இதன் போது நிதி திரட்டுவது தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை என்று தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் முன்னாள் தவிசாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு விராஜ் டி சில்வா மற்றும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் (அமுல்படுத்தல் மற்றும் பிரதேச அபிவிருத்தி) ஆகியோர் உறுதி செய்தார்கள்.

23. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் வருமானம்

	2023 (ரூபா மில்லியன்)	2024 (ரூபா மில்லியன்)
ஒட்டுமொத்த வருமானம்	1184.00	969.00
காணிகளை ஏலத்தில் விடுதல் மூலமான வருமானம் (அரச காணிகளை ஏலத்தில் விடுதல் மற்றும் LRC காணிகளை ஏலத்தில் விடுவதன் கீழ் கணக்குகளில் பதிவு செய்யப்படுபவை)	276.82	17.23
வியாபார உரிமம் மூலமான வருமானம்	112.00	144

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளரினால் (நிதி) சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி தகவல்களுக்கு அமைய, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை 2023 ஆம் ஆண்டில் காணிகளை ஏலத்தில் விற்றதன் மூலம் 276.82 மில்லியன் ரூபா வருமானத்தை உழைத்துக் கொண்டுள்ள போதிலும், 2024 ஆண்டு மேற்படி வருமானம் 17.23 மில்லியன் ரூபாவாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை குழு அவதானித்தது.

இது தொடர்பில் விளக்கமளித்த தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் (காணிகள், அகழ்வு மற்றும் சுற்றாடல்) இதற்கான காரணம், 2024 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த பல்வேறு ஏலம்விடல்களை நடாத்தத் தேவையான சகல நடவடிக்கைகளும் ஒழுங்குசெய்யப்பட்டு பத்திரிகை அறிவித்தல்களும் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் இறுதி நேரத்தில் நிறுத்த வேண்டி ஏற்பட்டதனால் அவற்றிலிருந்து எதிர்பார்த்தவாறு வருமானம் கிடைக்காமையாகும் என்று குறிப்பிட்டார்.

24. <u>2024.07.18 ஆம் திகதி பெரடையிஸ் வாவியின் காணிக்கான ஏலம் விடல் ரத்துச் செய்யப்பட்டமை</u>

இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான குருவிட்ட பெரடையிஸ் வாவியில் அமைந்துள்ள 20 காணித்துண்டுகளை 01 வருட காலப்பகுதிக்கு இரத்தினக்கல் அகழ்வு உரிமையை சாட்டுதல் செய்வதற்கான ஏலம் விடுவதை 2024 யூலை மாதம் 18 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் நடாத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும், தவிர்க்க முடியாத

காரணத்தினால் இந்த ஏலம் நடாத்தப்பட மாட்டாது என்று 2024.07.16 திகதி அறிவிக்கப்பட்டதாகவும் குழு அவதானித்தது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் (காணிகள், அகழ்வு மற்றும் சுற்றாடல்) இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், இரத்தினபுரி வே கங்கை மற்றும் பெரடையிஸ் வாவியைச் சூழவுள்ள பிரதேசங்களில் சட்டவிரோத இரத்தினக் கல் அகழ்வு பரவலாக இடம்பெறுகின்றது என்றும், பெரடையிஸ் வாவியின் ஒரு காணி 2024 யூலை மாதம் 18 ஆம் திகதி ஏலத்தில் விட ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது என்றும், ஏலம் திட்டமிடப்பட்டு, காணித்துண்டுகளை அளவை செய்து தூண்களை நடுவதற்காக சுமார் 1.7 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது என்றும், இறுதி நேரத்தில் அதனை ரத்துச் செய்யுமாறு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் முன்னாள் தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அறிவித்தார் என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி கருத்து வெளியிடுகையில், தமது பிரதேசங்களில்

சட்டவிரோத இரத்தினக் கல் அகழ்வு பரவலாக இடம்பெறுகின்றது என்றும், இதுவரை இந்நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும், இவ்வாறான காணிகளை ஏலத்தில் விடுவதற்கு முயற்சிக்கும் போது மேற்படி தரப்பினர்கள் மற்றும் பிரதேசவாசிகள் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும், மேற்படி எதிர்ப்புக்களின் அடிப்படையில் சனாதிபதி இந்த ஏலத்தை இடைநிறுத்த தீர்மானித்தார் என்றும் அப்போதைய கைத்தொழில் அமைச்சர் கௌரவ டாக்டர் ரமேஷ் பதிரண தமக்கு அறியத்தந்தார் என்று குறிப்பிட்டார்.

குழுவின் விதப்புரை

பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு:

I. மேற்படி இரத்தினக்கல் காணிகளை ஏலம் விடுவதை நிறுத்துவதற்கு அமைச்சரவையின் தீர்மானம் உள்ளதா என்பது பற்றி ஆராய்ந்துபார்த்து அதனை குழு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் 01 மாத காலப்பகுதிக்குள் சமர்ப்பித்தல்.

விதப்புரையை அமுல்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்

செயலாளர், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

<u>குழுவின் விதப்புரையை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்</u>

2024.07.18 ஆம் திகதி இரத்தினபுரி இரத்தினக்கல் கோபுர வளவில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்த பெரடையிஸ் வாவி இரத்தினக்கல் காணிகளை ஏலம் விடுவதை நிறுத்துவது தொடர்பாக அமைச்சரவைத் தீர்மானம் கிடைத்திருக்கவில்லை என்றும், பொது மக்களின் எதிர்ப்புக் காரணமாகவும், அரசியல் நிலைமையை கவனத்தில் கொண்டும் மேற்படி ஏலத்தை அச்சந்தர்ப்பத்தில் நடாத்த வேண்டாமென அப்போதைய கௌரவ சனாதிபதியினால் விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரவை அமைச்சர் ஊடாக முன்னாள் தவிசாளருக்கு வாய்மூலம் ஆலோசனை வழங்கப்பட்டதன் பேரில் இந்த ஏலம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளரின் MOIED/EDD/ADM/ES/02/06 ஆம் இலக்க 2025.05.23 ஆம் திகதிய கடிதம் மூலம் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

25. <u>சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வை தடுத்தல்</u>

இது தொடர்பாக குழு பின்வரும் விடயங்களை அவதானிப்புச் செய்தது.

- சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வைத் தடுப்பதற்காக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை முக்கியமாக தாபிக்கப்பட்டுள்ளது என்பது,
- அதற்கமைய சட்டத்தின் 15 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய சட்ட ரீதியாக இரத்தினக்கல் அகழ்வுக்கு உரிமம் வழங்கப்படல் வேண்டும் என்பது,
- வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இரத்தினக்கல் கைத்தொழிலை அரச காணியில்/ தனியார் காணியில் கொண்டு நடத்தப்படும் அல்லது கொண்டு நடத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய இரத்தினக்கல் கைத்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான உரிமங்களை வழங்குவதற்குப் பொறுப்பான பூரண அதிகாரசபையாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை காணப்படுதல் வேண்டும்.

- எனவே, அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட உரிமமொன்றின் தத்துவத்தின் கீழ் அன்றி யாராயினுமொரு ஆள் ஒருவரினால் இரத்தினக்கல் கைத்தொழில் கொண்டு நடாத்தப்படக் கூடாது என்பதும், உரிமத்துக்கான ஒவ்வொரு கோரிக்கையும் உரிய மாதிரிப்படிவத்திற்கு அமைய அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதும்,

- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை அறியாத நிலையில் எந்த வகையிலுமான இரத்தினக்கல் அகழ்வு உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அல்லது இரத்தினக்கல் கைத்தொழிலை கொண்டுநடாத்துவதற்கு அனுமதி இல்லை என்பதும், அவ்வாறு இடம்பெறுமாயின் அது அதிகாரசபையின் பொறுப்பின் கீழ் இருத்தல் வேண்டும் என்பதும்,

- 1950 இன் 30 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சட்டத்தின் 47 முதல் 52 வரையான பிரிவுகளில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை.

➢ உதாரணமாக மேற்படி சட்டத்தின் 47 ஆம் பிரிவின் மூலம்

“அதிகாரசபையானது, அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமானதெனக் கருதுமிடத்து, எந்த வளவுகளுக்குள் இரத்தினற்கல் கைத்தொழில் அல்லது ஆபரணக் கைத்தொழில் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அந்த வளவுகள் எவற்றினுள்ளும் நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் நுழைவதற்கும் அவற்றைப் பரிசோதிப்பதற்கும் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம். அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் இதனகத்துப் பின்னர் “அதிகாரம்பெற்ற அலுவலர்” எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

48 (1) பிரிவு

‘அதிகாரம் பெற்ற அலுவலர் எவரும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்தும் நோக்கத்திற்காக இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ் இரத்தினக்கல் கைத்தொழில் கொண்டுநடத்தப்படுகின்றதான எந்தவொரு இடத்திற்கும் சென்று சோதனையிடலாம்”

என்ற வகையிலான தத்துவத்தை அதிகாரசபை அமுல்படுத்த வேண்டும் என்று குழு வலியுறுத்தியது.

<u>குழுவின் விதப்புரை</u>

<u>பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு:</u>

I. சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு மற்றும் வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் நிபந்தனைகளை மீறல் தொடர்பாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் அமுல்படுத்தும் பிரிவினை பலப்படுத்தத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதும், அது தொடர்பான பொழிப்பு அறிக்கையை 01 மாத காலப்பகுதிக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதி சகிதம் குழுவிடம் சமர்ப்பிப்பதும்.

<u>விதப்புரையை அமுல்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>

தவிசாளர், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

<u>குழுவின் விதப்புரையை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்</u>

விதப்புரையை அமுல்படுத்துவதன் முன்னேற்றம் குறித் 2025.05.30 ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

26. **<u>தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்குக் கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்.</u>**

இது தொடர்பில் கீழ்வரும் விடயங்கள் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன.

- தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக் கட்டிடத்திற்கு அருகில் தனியார் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மானமொன்றினால் அதிகாரசபையின் கட்டிடம் 2021 ஜூலை 16 ஆம் திகதி தாழிறங்கியுள்ளதன் காரணத்தால் தற்காலிகமாக கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயற்பாடுகளை மேற்கொண்ட பிறகு பெறுகை முறைமை எதுவுமின்றி ஒரு கட்டிடம் வாடகைக்குப் பெறப்பட்டுள்ளதாகவும்,

- பின்னர் பெறுகை முறைமையின் கீழும் அதே கட்டிடம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும்,

- 2021 செப்டம்பர் 01ஆம் திகதியிலிருந்து 2023 ஆகஸ்ட் 31ஆம் திகதி வரையான இரண்டு வருட காலப்பகுதிக்கு 4,500,000 ரூபாய் வீதம்

மாதாந்தக் வாடகையை செலுத்தியுள்ளதாகவும்,

- மேற்படி குத்தகைக் காலம் முடிந்த பின்னர் 2023 செப்டம்பர் 01ஆம் திகதியிலிருந்து 2025 ஆகஸ்ட் 31ஆம் திகதி வரையில் மீளவும் பெறுகை நடைமுறைமையைப் பின்பற்றி அதே கட்டிடத்தை தேர்ந்தெடுத்து மாதாந்தக் குத்தகை வாடகையாக 4,950,000 ரூபாய் வரை அதிகரித்துச் செலுத்தியுள்ளதாகவும்,

- அதற்கான குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பிறகு அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருந்ததோடு அதன்படி மாதாந்த வாடகைப் பெறுமதி 4,800,000 ரூபா என்பதாகவும்,

- மேற்படி மதிப்பீட்டு பெறுமதியை விட 150,000 ரூபா அதிகப்படியான வாடகையொன்றை செலுத்துவதற்கு அப்போது ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தமையால் 2023 செப்டம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் ஒரு வருடத்திற்கு 3,600,000 ரூபாய் மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளதாகவும்,

- அதிகாரசபை வாடகைக்குப் பெற்ற கட்டிடத்தின் உரிமை நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது, இரத்தினக்கல் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள மற்றும் இரத்தினக்கல் அகழ்வு, வர்த்தக மற்றும்

ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுள்ள வேறொரு நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையே என்றும்,

- அதிகாரசபை கட்டிடத்தின் தற்போதைய நிலை குறித்து மதிப்பீடு செய்து விரிவான அறிக்கையொன்றை தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும், அத்தகைய பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் அதிகாரசபையின் கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதத்தை சீர்செய்வதற்காக முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் உள்ளடங்கிய விரிவான அறிக்கையொன்றை குறித்த சேதத்திற்கு காரணமான கட்டிடத்தை நிர்மானித்த நிறுவனம் வழங்க வேண்டுமென்று 2021 ஆம் ஆண்டு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும்,

- மேற்படி நிறுவனத்தினால் 6 மாத காலத்திற்காக அதிகாரசபைக்கு அவர்களால் தேடித்தரப்படும் கட்டிடமொன்றில் வாடகையாக மாதாந்தம் 3 மில்லியன் ரூபாய் செலுத்த ஒப்புக்கொண்டுள்ளதாகவும், ஆயினும் அதிகாரசபை அந்நிறுவனம் தேடித்தந்த கட்டிடத்தை வாடகைக்கு பெறாததால் அந்நிறுவனம் மேற்படி வாடகை தொகையை அதிகாரசபைக்கு செலுத்தவில்லையெனவும்,

- 2021 ஜூலை தொடக்கம் 2025 பெப்ரவரி வரை 2089.5 மில்லியன் ரூபா (2.0895

பில்லியன்) வாடகையாகச் செலுத்தியுள்ளதாகவும், 2024 ஆகஸ்ட் 2 ஆம் திகதி மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திடமிருந்து (CECB) பெறப்பட்ட அறிக்கையின் படி, அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை சீர்செய்ததன் பின்னர் கட்டிடத்தை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வர முடியுமென்பதாகவும், இக்கட்டிடத்தைப் புரனமைப்பு செய்வதற்கு 6,770,037 ரூபா மதிப்பீட்டுத் தொகையும், நீர்க்குழாய்க் கட்டமைப்பைச் சீர்செய்வதற்கு 14 மில்லியன் ரூபாய் உட்பட 21 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டுத் தொகையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும்,

இது தொடர்பாக தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் (மனிதவள மற்றும் நிர்வாக) கருத்து தெரிவிக்கையில்,

- அதிகாரசபையின் முகாமைத்துவக்குழுக் கூட்டத்தில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் அதிகாரசபைக்கு புதியதொரு கட்டிடத்தைப் பெறுவதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு ஆராய்ந்து பரிந்துரை வழங்குவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதாகவும், தானும் அக்குழுவில் உறுப்பினர் என்பதாகவும், கொழும்புக்கு அண்மித்த பகுதிகளில் பொருத்தமான கட்டிடங்களைத் தேடிப்பார்த்து உரிய தகவல்களை குழுவிற்கு சமர்ப்பித்ததாகவும்,

- அதன்படி 2024.05.29 ஆம் திகதிய, 2475ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்திற்கமைய நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் அதிகாரசபைக்கு புதிய கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதல் கிடைத்ததாகவும்,

- மேற்படிப் பணியை மேற்கொள்வதற்காக அதிகாரசபையின் பெறுகைப் பிரிவுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் DSP228/2022 இன் கீழ் விசாரணை செய்யப்படும் வழக்குக் கோவையின் விடயங்களை மேற்கோள்காட்டி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) தெரிவிக்கையில்,

- குறித்த சேதத்தை ஏற்படுத்திய நிறுவனம் 4.5 மாத வாடகையை செலுத்த ஒப்புக்கொண்டபோதிலும் அதிகாரசபையை மீண்டும் பழைய கட்டிடத்திற்கு மாற்றுமாறு கோரியுள்ளதாகவும், அது தொடர்பாக இரு தரப்பினருக்குமிடையே ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடு தொடர்பில் குறிப்பிடப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டதாகவும்,
- பெறுகையொன்றை மேற்கொள்வதற்கான பணிப்பாளர் சபைத் தீர்மானமொன்று இருப்பதாகவும், வழக்குக் கோவையில் இவ்விடயம் தொடர்பான பல பணிப்பாளர்

சபை பத்திரங்கள் இருப்பதனால் மேலும் ஆராய்ந்து அறிக்கையொன்றை வழங்க முடியுமெனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் தலைவர் கருத்து தெரிவிக்கையில், தாம் இது தொடர்பில் ஆராய்ந்து பார்த்தாகவும், இரண்டாவது தடவை கட்டிடத்தை வாடகைக்கு பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட பெறுகைச் செயற்பாட்டில் குறைபாடுகள் இருப்பதாக அவதானிக்கப்பட்ட போதிலும் அது தவறான உள்நோக்கத்துடன் செய்யப்படவில்லையென்பது தனது கருத்தாகுமென்றும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அதிகாரைசபையின் உதவிப் பணிப்பாளர் (பெறுகை) கருத்துத் தெரிவிக்கையில்,

- அதிகாரசபைக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் கொழும்புப் பிரதேசத்தில் அலுவலகக் கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு பத்திரிகை விளம்பரங்களை பிரசுரித்து தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு 2023.07.06ஆம் திகதி நிர்வாகப் பிரிவிலிருந்து தனக்கு அறிவிக்கப்பட்டதாகவும்,

- நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெறுவதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால், இவ்விரு காரணிகளுள் எக்காரணிக்கு விலைமனுக் கோருவது என்பதில் சிக்கல்

நிலைமை எழுந்தமையினால், அதிகாரசபைக்கு 2 வருட குத்தகை அடிப்படையில் ஒரு கட்டிடத்தை பெறுவதற்கு பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்காக தலைவரிடமிருந்து எழுத்துமூலமாகக் கோரப்பட்டதாகவும்,

- இது சம்பந்தமாக, அப்போது அதிகாரசபை இயங்கிவந்த கட்டிடத்திற்குச் செலுத்துகின்ற வாடகை அதிகமென்பதால் அதைவிடக் குறைந்த விலையில் ஒரு கட்டிடத்தைத் தேடுவதற்கும், இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் எழுத்து மூலமாக விசாரணை செய்வதற்கு அப்போதைய தலைவரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும், இருப்பினும், நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அத்தகைய கட்டிடங்கள் எதுவும் இல்லை என்று பதில் கிடைத்ததாகவும்,

- அதன் பின்னர், கட்டிடத்தின் குத்தகை ஒப்பந்தம் 2023.08.31ஆம் திகதியன்று காலாவதியாகவிருந்த போது, 2023.08.29ஆம் திகதியன்று பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்படி அதிகாரசபைக்கு புதிய கட்டிடமொன்றினைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிர்வாகப் பிரிவிலிருந்து அறிவுறுத்தல்கள்

கிடைக்கப்பெற்ற போதிலும், அப்போதைய ஒப்பந்தக் காலம் காலாவதியாவதற்கு 2 நாட்கள் மட்டுமே இருந்த காரணத்தால், அக்காலப்பகுதிக்குள் விலைமனுக்கள் கோரப்பட்டதாகவும், மதிப்பீட்டு அறிக்கையைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்பு அவ்வறிக்கை கிடைக்கவில்லையென்றும், அதற்கமைய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட நேர்ந்ததாகவும்,

- மூன்று மொழிகளிலும் பத்திரிகை விளம்பரங்களை பிரசுரித்து போட்டித் தன்மைமிக்க கூறுவிலைகளைக் கோருவதற்கு மேலதிகமாக, அதிகாரசபையின் இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டதாகவும், ஆனால் ஒரேயொரு விலைமனுதாரர் மாத்திரமே (அப்போது அதிகாரசபை இயங்கிவந்த கட்டிடத்தின் உரிமையாளர்) விலைமனுக்களைச் சமர்ப்பித்ததாகவும், அதற்கமைய மேற்படி கட்டிடத்தையே குத்தகைக்கு பெற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முன்வைக்கப்பட்ட இவ்வனைத்து விடயங்களுக்கமைய பின்வரும் விடயங்களில் சிக்கல்கள் உள்ளதை குழு அவதானித்தது.

- இரண்டாவது முறையாகவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும்போது மேற்கொள்ளப்பட்டுள்ள பெறுகைச் செயன்முறையில் திருப்தியடைய முடியாதென,
- விலைமனுக் கோரலின்போது ஒரேயொரு தரப்பு மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ளமையானது அதன் வெளிப்படைத்தன்மை தொடர்பான சிக்கல்களை தோற்றுவித்துள்ளதாக,
- அரசாங்க மதிப்பீட்டு அறிக்கையைப் பெறாமல் அதிக வாடகையைச் செலுத்தத் தீர்மானித்தமை தொடர்பில் பாரதூரமான சிக்கல்கள் காணப்படுவதாகவும்,
- குறிப்பிட்ட சேதத்தை ஏற்படுத்திய நிறுவனத்திடமிருந்து சேதமடைந்த கட்டிடத்திற்கான இழப்பீட்டைப் பெறத் தவறியமை,
- தற்போதைய அரசாங்கக் கொள்கைக்கமைய அரச நிறுவனங்கள் வாடகைக் கட்டிடங்களிலிருந்து வெளியேறி அரச கட்டிடங்களைப் பயன்படுத்த வேண்டுமென்றுள்ள போது அதிகாரசபை அவ்வாறு செய்யத்தவறியமை,
- நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு காரணமாக இழப்பீடு பெறுவது குறித்து அதிக கவனம் செலுத்துதல்,
- இவ்வாறு அதிகாரசபை புதிய கட்டிடத்திற்கு மாற்றிய போதிலும் தலைமையகத்தில் இருந்த FTIR இயந்திரம் நீர்க்கசிவு காரணமாகச் செயலிழந்துள்ளதாக

2025.03.05ஆம் திகதி இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் விடயங்கள் முன்வைக்கப்பட்டமை மற்றும் மேற்படி சேதமடைந்த உபகரணங்களின் மதிப்பு அண்ணளவாக ரூ. 18 மில்லியன் என்றும், அவற்றைப் பாதுகாக்க முடியாமல் போனதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர் பேராசிரியர் ஜி.டப்லியு.ஏ. ரொஷான் பிரனாந்து, 2025.03.26ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின்போது இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடியதாகவும், அதன்போது பழைய கட்டடத்தில் அதிகாரச் சபையை மீண்டும் தாபிப்பதற்கு தீர்மானித்ததாகவும் தெரிவித்தார்.

தற்போதைய நிலை தொடர்பாக புதிய பணிப்பாளர் சபை அறிந்திருப்பதாகவும், ரூ. 21 மில்லியன் செலவு செய்து பழுதுபார்த்துப் பயன்படுத்தக் கூடிய கட்டடத்தை பயன்படுத்தாமல் அதிகமான குத்தகைத் தொகையை செலுத்திவருவது பொருளாதார ரீதியில் நன்மை பயக்காத தீர்மானம் என்பதை அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் எனவும், ஏற்கனவே பயன்படுத்திய கட்டடம் தற்போதும் சிறந்த நிலையில் காணப்படுகிறது எனவும், அக்கட்டடம் பாதுகாப்பானது என்று

தொழில்நுட்ப அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், சேதம் ஏற்படுத்திய தரப்பினருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும், வருட இறுதிக்குள் புதிய கட்டடத்திற்கு செல்வது சிரமானது என்பதால் தற்காலிகமாக அக்கட்டடத்திலேயே இருக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும், ஆய்வு கூட உபகரணங்களை வேறு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு அதிக செலவு ஏற்படும் எனவும், புதிய பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சு இணைந்து இப்பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன எனவும் பணிப்பானர் சபை அங்கத்தவர் தினுக பெரேரா தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த கணக்காய்வாளர் நாயகம், இக்காலப்பகுதியில் அரச மூலதனச் செலவுகளை மேற்கொள்ள வேண்டாம் என சுற்றுநிருபம் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக இந்த அதிகார சபைக்கு புதிய கட்டடமொன்றை நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்க முடியாது எனவும், குத்தகை அடிப்படையில்

மாத்திரமே கட்டடமொன்றைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும், இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் வேண்டுமென்றே பெறுகை நடவடிக்கைகளை தாமதப்படுத்தி அக்கட்டத்தின் உரிமையாளருக்கு விலைமனுவை தாக்கல் செய்ய சந்தர்ப்பம் வழங்கும் உள்நோக்கத்துடன் இவ்வலுவலர்கள் செயற்பட்டுள்ளமையை தாம் அவதானித்ததாக குறிப்பிட்டார்.

<u>குழுவின் பரிந்துரைகள்</u>

<u>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு;</u>

I. குத்தகைக்குப் பெற்ற கட்டிடங்களில் இயங்கும் அனைத்து அரச நிறுவனங்களையும் அவ்விடங்களிலிருந்து அகற்றி, அவற்றை அரச கட்டடங்களில் நிறுவ தற்போதைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் குறித்து கவனம் செலுத்துதல்.

II. கூடிய விரைவில் பழைய கட்டடத்தை புதுப்பித்து, மீண்டும் அக்கட்டடத்தை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் மற்றும் அதற்கான காலச்சட்டகத்தை தயாரித்தல்.

III. சம்பந்தப்பட்ட ஹோட்டல் கருத்திட்டத்திலிருந்து மாதாந்தம் ரூ.03 மில்லியன் செலுத்துவதற்கு உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டதற்கு அமைய அத்தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

IV. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையை பழைய கட்டிடத்தில் நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை 2025.08.31ஆந் திகதி அலுவலகம் காணப்படும் கட்டடத்துடன் தொடர்பான குத்தகை ஒப்பந்தங்கள் காலாவதியாவதற்கு முன்பு தற்போதுள்ள அனைத்து நிலைமைகளையும் கருத்தில் கொண்டு (பழைய கட்டடத்தில் அலுவலகத்தை நிறுவக்கூடிய திகதி, புதிய கட்டடமொன்றை தேடுவதற்கு எடுக்கும் நேரம், செலவு, அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்களைக் கொண்டு செல்வதற்கான செலவு,........) மிகப் பொருத்தமான தீர்மானத்தை துரிதமாக மேற்கொள்ளல்.

V. இவ்வாறு பாரிய ஆபத்துமிகு செலவினைச் செய்யத் தேவையான சூழலை உருவாக்கிய, அனைத்து பொறுப்பு வாய்ந்த அலுவலர்களுக்கும் எதிராக தகுந்த

ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

VI. இப்பரிந்துரைகள் அனைத்தையும் செயற்படுத்தி, அது குறித்த அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிட்டு ஒரு மாதத்திற்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.

<u>பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புவாய்ந்த அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>

செயலாளர் – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் – தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

<u>குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்</u>

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து 2025.05.30ஆந் திகதி வரையிலும் குழுவுக்கு அறிக்கையிடவில்லை.

27. **<u>பேருவலை இரத்தினக்கல் சந்தையின் பிரச்சினை</u>**

பேருவளை இரத்தினக்கல் சந்தையில் உள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் சீன நாட்டவர்களால் நடத்திச் செல்லப்படுவதாகவும், இதனால் உள்நாட்டு இரத்தினக்கல்

வர்த்தகர்களுக்கு தங்கள் இரத்தினக்கற்களை விற்பனை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், சீனர்கள் குறைந்த விலையில் இரத்தினக் கற்களை கொள்வனவு செய்வதாகவும், அது குறித்த முறைப்பாடுகள் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியான்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளரான தனக்கு கிடைத்திருப்பதாகவும் அவர் குழுவிடம் தெரிவித்தார்.

சீன நாட்டவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதன் மூலம் அப்பிரதேச மக்கள் வருமானம் ஈட்டி வருவதால், இந்நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அதில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதாக அதிகாரசபையின் அலுவலர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி வெளிப்படுத்தலுக்கு அமைவாக, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, ஒரு பொறுப்பான நிறுவனமாக தனது பணிப்பொறுப்பினை உரிய முறையில் நிறைவேற்றுவதில்லை என்பதை குழு அவதானித்தது.

28. <u>தாய்லாந்து சுற்றுப்பயணம்</u>

பேங்கொக் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சியில் பங்கேற்பதற்கு அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் குழு திட்டமிட்டிருந்த போதிலும், அந்தப் பயணம்

இரத்தானதாகவும், அந்தப் பயணத்திற்காக செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ரூ.1,914,571.75 தொகையை அதிகார சபை ஏற்பதற்கு முன்மொழியப்பட்டதாகவும், அப்போதைய சனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு தெரிவித்ததை அடுத்து, இராஜாங்க அமைச்சரின் சுற்றுப்பயணம் இரத்தானதுடன், அதிகாரிகளுக்கு சுற்றுப்பயணத்தில் பங்கேற்பதற்கான ஒப்புதலானது அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அதிகாரிகளும் இச்சுற்றுப்பயணத்தில் பங்கேற்கவில்லை எனினும், இதற்கான நிதியொதுக்கீட்டுத் தீர்மானத்தின் துல்லியத்தன்மை குறித்த சந்தேகம் நிலவுவதையும் குழு அவதானித்தது.
தாய்லாந்தின் இரத்தினக்கல் சந்தை மற்றும் அவர்களுடைய சட்ட விதிகள் கட்டமைப்பு தொடர்பாக ஆராய்வதே இச்சுற்றுப்பயணத்தின் நோக்கம் என தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் முன்னாள் தலைவர் விராஜ் டி சில்வா தெரிவித்தார்.

குழுவின் பரிந்துரைகள்

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு;

I. இச்சுற்றுப்பயணத்துடன் தொடர்பான பணிப்பாளர் சபைப் பத்திரம் மற்றும் பணிப்பாளர் சபை ஒப்புதலை குழுவிற்கும்

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் 02 வாரத்திற்குள் சமர்ப்பித்தல்.

<u>பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>

செயலாளர் – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் – தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

<u>குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்</u>

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து 2025.05.30ஆந் திகதி வரையிலும் குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

29. **<u>லாஸ் வேகாஸ் சுற்றுப்பயணம்</u>**

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் மற்றும் சிலரும் லாஸ் வேகாஸில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் கலந்து கொண்டுள்ளதுடன், அதற்காக ரூ.60 இலட்சம் செலவிடப்பட்டுள்ளதை குழு அவதானித்தது.

தாய்லாந்தைப் போன்றே இலங்கையிலும் இரத்தினக்கல் கைத்தொழிற்றுறைக்கான மையத்தை உருவாக்குவதற்கான அனுபவத்தைப்

பெறுவதே இச்சுற்றுப்பயணத்தின் நோக்கம் எனவும், இரத்தினபுரியில் இரத்தினக்கல் கண்காட்சியை ஏற்பாடு செய்வதற்கு மேற்படி சுற்றுப்பயணத்திலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவங்கள் பயன்படுத்தப்பட்டது எனவும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் முன்னாள் தலைவர் விராஜ் டி சில்வா தெரிவித்தார்.

30. **<u>பொறுப்புக்கூறலும் வெளிப்படைத்தன்மையும்</u>**

இந்த அதிகாரசபையில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பாக அதிகாரிகளின் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்து குழு மிகுந்த கவனம் செலுத்தியதோடு, பணிப்பாளர் சபை உட்பட அனைத்து அதிகாரிகளும் சட்டக் கட்டமைப்பிற்குள் செயற்படுவதன் முக்கியத்துவத்தை குழு வலியுறுத்தியது.

31. **<u>கலந்துரையாடுவதற்கும், பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கும் முடியாமல்போன விடயங்கள்</u>**

2023ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தொடர்பாக சமர்ப்பித்துள்ள 2025.03.05 ஆந் திகதி மற்றும் 2025.03.27ஆந் திகதிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டு தனித்தனியாக பரிந்துரைகளை சமர்பிக்காத அனைத்து கணக்காய்வு அவதானிப்புக்கள் குறித்தும் அமைச்சு மட்டத்தில்

விசாரணையொன்றை நடாத்துவது பொறுத்தமென குழு அவதானித்தது.

<u>குழுவின் பரிந்துரைகள்</u>

<u>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு;</u>

I. **2023** ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை தொடர்பில் சமர்ப்பித்துள்ள **2025.03.05** ஆந் திகதி மற்றும் **2025.03.27** ஆந் திகதிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டு தனித்தனியாக பரிந்துரைகளை சமர்பிக்காத அனைத்து கணக்காய்வு அவதானிப்புக்கள் குறித்தும் அவதானம் செலுத்தி, ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அது குறித்த அறிக்கையொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிட்டு குழுவிடம் சமர்ப்பித்தல்.

<u>அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் செயலாளருக்கு;</u>

I. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும் இந்த விசாரணை அறிக்கையை சட்ட நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்துதல்.

II. அது தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிட்டு, குழுவுக்கு தெரியப்படுத்துதல்.

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்

செயலாளர் – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

தலைவர் – தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து 2025.05.30ஆந் திகதி வரையிலும் குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

இணைப்பு 01

121-8 (121-7 திருத்தம்)

இரத்தினக்கல், ஆபரண வர்த்தகர்களால் மேற்கொள்ளப்படும் தவறுகளை மத்தியஸ்தம் செய்தல்

	தவறின் தன்மை	1ஆம் சந்தர்ப்பம்	2ஆம் சந்தர்ப்பம்	3ஆம் சந்தர்ப்பம்
1.1	உரிமமின்றி இரத்தினக்கல் வர்த்தகத்தில் ஈடுபடல்	ரூ.5,000.00-ரூ.333,333.33+ கையிருப்பின் பெறுமதிக்கேற்ப உரிமத்தை வழங்கல்	ரூ.10,000.00 - ரூ.333.333.33+ கையிருப்பின் பெறுமதிக்கேற்ப உரிமத்தை வழங்கல்	ரூ.15,000.00 - ரூ.333,333.333+ கையிருப்பின் பெறுமதிக்கேற்ப உரிமத்தை வழங்கல்/ பொருட்களுக்குத் தடைவிதித்து சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
1.2	இரத்தினக்கல் வர்த்தக உரிமத்தை (சட்டகமிட்டு) வர்த்தக நிலையத்தில் காட்சிப்படுத்தாமை	ரூ.1,500.00	ரூ.2,000.00	ரூ.3,500.00
1.3	இரத்தினக்கல் விற்பனையின்போது இரத்தினைக்கற்களின் விபரங்கள் மற்றும் விலை தெளிவாகக் குறிப்பிடப்பட்ட	முதலாம் தடவையில் உரிமக் கட்டணத்தின் 02 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	இரண்டாம் தடவையில் உரிமக் கட்டணத்தின் 05 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	மூன்றாம் தடவையில் உரிமக் கட்டணத்தின் 10 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் (அதிகபட்சம் ரூ.333,333.33இனை விஞ்சாதிருத்தல் வேண்டும்) / உரிமத்தை இரத்துச்செய்து மேற்படி உரிமம் பெறுநரின் பெயரில் மீண்டும் உரிமங்களை

	பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பிக்காமை			வழங்காதிருத்தல் (கருப்புப் பட்டியலில் உள்ளடக்கல்)
1.4	இரத்தினக்கற்களை கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்காக சரியான ஆவணங்களை பேணிச்செல்லாமை	முதலாம் தடவை உரிமக் கட்டணத்தின் 02 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	இரண்டாம் தடவை உரிமக் கட்டணத்தின் 05 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	மூன்றாம் தடவை உரிமக் கட்டணத்தின் 10 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் (அதிக பட்சம் ரூ.333,333.33 இனை விஞ்சாதிருத்தல் வேண்டும்) / உரிமத்தை இரத்துச் செய்து மேற்படி உரிமம் பெறுநரின் பெயரில் மீண்டும் உரிமங்களை வழங்காதிருத்தல் (கருப்புப் பட்டியலில் உள்ளடக்கல்)
1.5	கையிருப்புப் புத்தகத்தை வைத்திருக்காமை (இரத்தினக்கல் வர்த்தகம்)	முதலாம் தடவை உரிமக் கட்டணத்தின் 02 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	இரண்டாம் தடவை உரிமக் கட்டணத்தின் 05 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	மூன்றாம் தடவை உரிமக் கட்டணத்தின் 10 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் (அதிகபட்சம் ரூ.333,333.33 இனை விஞ்சாதிருத்தல் வேண்டும்) / உரிமத்தை இரத்துச் செய்து மேற்படி உரிமம் பெறுநரின் பெயரில் மீண்டும் உரிமங்களை வழங்காதிருத்தல் (கருப்புப் பட்டியலில் உள்ளடக்கல்)
1.6	வெளிநாட்டு நாணயத்திற்கு இரத்தினக்கற்களை விற்பனை செய்யும்போது உரிமம் பற்றிய நிபந்தனை	முதலாம் தடவை உரிமக் கட்டணத்தின் 02 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	இரண்டாம் தடவை உரிமக் கட்டணத்தின் 05 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	மூன்றாம் தடவை உரிமக் கட்டணத்தின் 10 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் (அதிகபட்சம் ரூ.333,333.33இனை விஞ்சாதிருத்தல் வேண்டும்) /

	(09)இற்கமையச் செயற்படாமை			உரிமத்தைஇரத்துச் செய்து மேற்படி உரிமம் பெறுநரின் பெயரில் மீண்டும் உரிமங்களை வழங்காதிருத்தல் (கருப்புப் பட்டியலில் உள்ளடக்கல்)
1.7	வர்த்தகம் தொடர்பான விபரங்களை இரு மாதங்களுக்கொருமுறை அதிகாரசபைக்கு வழங்காமை	முதலாம் தடவை உரிமக் கட்டணத்தின் 02 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	இரண்டாம் தடவை உரிமக் கட்டணத்தின் 05 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	மூன்றாம் தடவை உரிமக் கட்டணத்தின் 10 மடங்கினை மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் (அதிகபட்சம் ரூ.333,333.33இனை விஞ்சாதிருத்தல் வேண்டும்) / உரிமத்தைஇரத்துச் செய்து மேற்படி உரிமம் பெறுநரின் பெயரில் மீண்டும் உரிமங்களை வழங்காதிருத்தல் (கருப்புப் பட்டியலில் உள்ளடக்கல்)
1.8	அதிகாரசபையின் பெயரை சட்டவிரோதமாக இட்ட பெயர்ப்பலகையைப் பயன்படுத்தல்	ரூ.10,000.00	ரூ.20,000.00	ரூ.30,000.00/ உரிமத்தை இரத்துச்செய்து கருப்புப் பட்டியலில் உள்ளடக்கல்
1.9	அனுமதியின்றி இரத்தினக்கற்களைக் கொண்டு செல்லல்/ வெளிநாட்டுக்கு அனுப்ப முயற்சித்தல்	ரூ.100,000.00- ரூ.333,333.33 வரை	ரூ.200,000.00- ரூ.333,333.33 வரை	ரூ.333,333.33 / பொருட்களை அதிகாரசபை வசப்படுத்தல்

	1.1 தொடக்கம் 1.9 வரை தேவையான சந்தர்ப்பங்களில் இரத்தினவியலாளர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும்			
1.9.1	ஆபரண உற்பத்தி நிறுவனங்களைப் பதிவு செய்யாமை	ரூ.5,000.00+ பதிவு செய்தல்	ரூ.7,500.00+பதிவு செய்தல் மற்றும் கடிந்துரைத்தல்	ரூ.10,000.00+ பதிவு செய்தல்/ பொருட்களுக்கு தடைவிதித்து சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
1.9.2	ஆபரணங்களை உரிய தரவளவுகளின்றி விற்பனை செய்தல்	ரூ.10,000.00 மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் மற்றும் குறிப்பிட்ட ஆபரணத்தை உரிய தரவளவுடன் வழங்குதல் அல்லது பணத்தை மீளச் செலுத்துதல்	ரூ.20,000.00 மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் மற்றும் முதலாம் தடவை கூறப்பட்டதை போன்று செயற்படல்	ரூ.30,000.00 மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் மற்றும் கருப்புப் பட்டியலில் உள்ளடக்கல் / மத்தியஸ்தம் செய்தல் / பதிவை இரத்துச் செய்தல் / இணையத்தளத்தில் பெயரை உட்சேர்த்தல்
1.9.3	ஆபரணங்களை விற்பனை செய்கையில் மெருகூட்டப்பட்டுள்ள இரத்தினக்கற்களின் விலை மற்றும் நிறை தெளிவாகக் குறிப்பிடப்படாமை	ரூ.10,000.00	ரூ.15,000.00+ கடிந்துரைத்தல்	ரூ.20,000.00 மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் / பதிவை இரத்துச் செய்தல் அல்லது கருப்புப் பட்டியலில் உள்ளடக்கல்
1.9.4	ஆபரணங்களை விற்பனை செய்கையில் உரிய வகையில் நிறை, இரத்தினக்கற்களின்	ரூ.10,000.00	ரூ.15,000.00+ கடிந்துரைத்தல்	ரூ.20,000.00 மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் / பதிவை இரத்துச் செய்தல் அல்லது கருப்புப் பட்டியலில் உள்ளடக்கல்

	நிறை, பெறுமதி என்பன தெளிவாகவும் ஒழுங்காகவும் குறிப்பிட்டு பற்றுச்சீட்டுக்களை வழங்காமை			
1.9.5	ஆபரணங்களை கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்காகச் சரியான ஆவணங்களைப் பேணிச்செல்லாமை	ரூ.20,000.00 மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் மற்றும் மேற்படி ஆவணங்களை உரிய பிரகாரம் தயாரிப்பதற்குரிய அறிவுறுத்தல்களை வழங்கல்	ரூ.30,000.00 மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்	ரூ.50,000.00 மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல்
1.9.6	கையிருப்புப் புத்தகத்தை வைத்திருக்காமை (ஆபரணக் கைத்தொழில்)	ரூ.20,000.00 மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் + கடிந்துரைத்தல்	ரூ.30,000.00 + கையிருப்புப் புத்தகத்தை வைத்திருக்குமாறு அறிவுறுத்தல்களை வழங்கல்	ரூ.50,000.00 + கையிருப்புப் புத்தகத்தை வைத்திருக்குமாறு அறிவுறுத்தல்களை வழங்கல்
1.10	இரத்தினக்கல் கைத்தொழிலை அல்லது ஆபரணக் கைத்தொழிலை கொண்டு நடாத்தும் ஆளெவரும் ஏதேனும்	குறைந்தபட்சம் ரூ.10,000.00 அல்லது அதிகபட்சம் குறிப்பிட்ட பொருட்களின் பெறுமதியின் 1/3 ஆகிய	அதிகபட்சம் ரூ.333,333.33 இற்குட்பட்டதாக மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் மற்றும் தவறைத்	ரூ.333,333.33இற்குட்பட்டதாக மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் மற்றும் தவறைத் திருத்திக் கொள்ளல் / உரிமங்கள்

	பிரதிநிதித்துவத்தின்அல்லது விவரணத்தின் கீழ் அல்லது ஒரு கொள்வனவாளரை அல்லது உத்தேச கொள்வனவாளரை ஏமாற்றும் அல்லது தவறாக இட்டுச்செல்லும் திறனையும் உளப்பாங்கையும் கொண்ட, அல்லது அத்தகைய இரத்தினக்கல்லினது அல்லது ஆபரணத்தின் வகை, தரம், அளவு, பருமன், நிறை அல்லது பெறுமதி என்பன தொடர்பாகப் பிழையான அபிப்பிராயம் ஒன்றை உருவாக்குகின்ற சூழ்நிலைகளில் ஏதேனும் இரத்தினைக்கல்லினை அல்லது ஆபரணத்தை விற்பனை செய்தல்	ரூ.333,333.33இற்குட்பட்ட தாக மத்தியஸ்தக் கட்டணமாக அறவிடல் மற்றும் தவறைத் திருத்திக் கொள்ளல்	திருத்திக் கொள்ளல் + கடிந்துரைத்தல் (இல.1இல் குறிப்பிட்டது போன்று செயற்படுக)	வழங்குவதை 01 தொடக்கம் 05 வரையான ஆண்டுகளுக்கு இடைநிறுத்தி வைத்தல்

	அல்லது விற்கக் கொடைமுனைதல்			

(இரத்தினக்கல் வர்த்தகம் மற்றும் ஆபரண வர்த்தகம்)

.02இரத்தினக்கல் சுரங்கங்களை தோண்டுதல் அல்லது இரத்தினக்கல் அகழ்தல் பற்றிய தவறான இணக்கமொன்றிற்கு வருதல்.

- 2.2-2.1அனுமதியின்றிய சுரங்க அகழ்வு (பொறிமயமாக்கப்படாத(

2.3அனுமதியின்றிய சுரங்க அகழ்வு (பொறிமயமாக்கப்பட்ட(

	தவறின் தன்மை	தனியார் காணி			அரச வன ஒதுக்கம் /அரச காணி/ ஆறுகள்		
		1ஆவது சந்தர்ப்பம்	2ஆவது சந்தர்ப்பம்	3ஆவது சந்தர்ப்பம்	1ஆவது சந்தர்ப்பம்	2ஆவது சந்தர்ப்பம்	3ஆவது சந்தர்ப்பம்
2.1	உரிமம் வழங்கப்படாத காணியொன்றில் சுரங்கம் தோண்டுதல்) முதலாவது 100 சதுர அடி)	ரூ.00 .000 .15	ரூ.00 .000 20	ரூ.00 .000 .30	ரூ.00 .000 .30	ரூ.00 .000 .40	ரூ.00 .000 .60

2.1.1	முதலாவது 100 சதுர அடிக்கு பின்னர் அதிகரிக்கும் ஒவ்வொரு 100சதுர அடி வரை) ஐம்பது(	ரூ.00 .500 .7	ரூ.00 .000 .10	ரூ.00 .500 .12	ரூ.00 .000 .10	ரூ.00 .000 .20	ரூ.00 .000 .30
2.1.2 .	ஒன்றிலும் கூடிய சுரங்கங்கள் தோண்டப்பட்டிருப்பின் ’8×’12) அல்லது குறைவாக (முதலாவது சுரங்கத்திற்காக	ரூ.7. 500. 00	ரூ.10. 000. 00	ரூ.12. 500. 00	ரூ.10. 000. 00	ரூ.00 .000 .20	ரூ.00 .000 .30
2.1.3	அதிகரிக்கும் ஒவ்வொரு சுரங்கத்திற்காகவும் ’8×’12) அளவு அல்லது குறைவு)	2.1.1இன் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும்.					
.2.2	உரிமத்தை நீடிப்பதற்காக கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் உரிமம் பெறுநர் தன்னால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என ஆராய்ந்து அதற்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதன்போது முதல் சந்தர்ப்பத்தில் கடிந்துரைக்கப்பட்டு , இரண்டாவது சந்தர்ப்பத்தின் போது அனுமதியின்றிய செயற்பாடாக கருதப்பட்டு, 3. 1இன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.) உரிமம்						

	இடைநிறுத்தல்/ நிறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் அனுமதியின்றிய செயற்பாடாக கருதவேண்டும். (பொறிமயமாக்கப்பட்ட அகழ்வுகளுக்கு ஏற்புடையதல்ல)						
2.3	பொறிமயமாக்கப்பட்ட சுரங்க தோண்டுதலுக்காக பயன்படுத்தப்படும் பின்தோண்டி /முன்தோண்டி / இரத்தினக்கல்லைக் கொண்டுள்ள பரல் பம்பி ஆகிய இயந்திரங்களில் ஒரு இயந்திரத்திற்காக) ஒரு இயந்திரத்திற்கு 500 சதுர அடி வரை அதிக பட்சம் 333.333.33 வரை) ஒரு இயந்திரத்தை விட அதிகமாக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த இயந்திர எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடப்பட்டுள்ள இணக்க கட்டணத்தை அறவிட வேண்டும்.	ரூ.200. 000. 00	ரூ.250. 000. 00	ரூ.333. 333. 33	ரூ.300. 000. 00	ரூ.333. 333. 33	பொருட்களை அதிகார சபை வசப்படுத்தல் / நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

2.3.1.	அதிகரிக்கும் ஒவ்வொரு 500சதுர அடிக்கும்	ரூ.00 .000 .50	ரூ. .50 00 .000	ரூ.00 .000 .50	ரூ.00 .000 .50	ரூ.00 .000 .50	ரூ.00 .000 .50
2.3.2.	ஒன்றிலும் கூடிய சுரங்கங்கள் தோண்டப்பட்டிருப்பின் 500சதுர அடிக்காக	2.3 இன் பிரகாரம் செயற்பட வேண்டும்					
2.3.3.	அதிகரிக்கும் ஒவ்வொரு இயந்திரத்திற்காகவும்	ரூ.00 .000 .50	ரூ. .75 00 .000	ரூ.100. 000. 00	ரூ.00 .000 .50	ரூ.00 .000 .75	ரூ.100. 000. 00
.2.4	அனுமதியின்றிய இயந்திர சுரங்க அகழ்வு ,இயந்திர கொள்ளளவு PC 70அல்லது PC70	ரூ.100. 000. 00	ரூ.150. 000. 00	ரூ.00 .000 .200	ரூ.00 .000 .200	ரூ.00 .000 .250	ரூ.00 .000 .300
2.4.1.	அதிகரிக்கும் ஒவ்வொரு 500 சதுர அடிக்கும்	2.3.1இன் பிரகாரம் இடம்பெற வேண்டும்.					
.2.5	பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருப்பின் வீதிகள்,மதகுகள் ,பாலங்கள், ஆறுகள், நீரோடைகள்						
2.5.1	சாதாரண பாதிப்பின்போது, பாதிப்பு ரூ. 500,000.00ஐ விட குறைவாக மதிப்பிடப்பட்டிருப்பின்				ரூ.100.000.00	ரூ. 200 000.00	ரூ. 300 000.00
					)ஏற்புடைய சொத்துக்கள் பற்றியபெறுமதியை மதிப்பீடு செய்து சம்பந்தப்பட்ட நபருக்கு அனுப்பி சரிபார்த்தல்)		

2.5.2.	பாரதூரமான சேதத்தின்போது அல்லது சாதாரண சேதத்தின்போது மேற்கூறப்பட்டவாறு செயற்படாது விடின் (சேதம் ரூ. 500 000.00 ஐ விட அதிகம்)	ரூ.100 000.00- ரூ. 333. 333.33 உரிமத்தை இடைநிறுத்தி ஏற்புடைய சம்பவங்கள் மற்றும் சேதங்கள் பற்றிய அனைத்து விடயங்களையும் சாட்சியங்களையும் சேகரித்து அறிக்கையொன்றினை சட்டப் பிரிவிற்கு சமர்ப்பித்து கிடைக்கப்பெறும் அறிவுரைகளுக்கமைய செயற்பட வேண்டும். இன்றேல், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு செல்லுதல்.		
2.5.3	மூன்று மாத காலப்பகுதி காலாவதியாகியும் சுரங்கம் தோண்டுதல் (இயந்திரம்)	ரூ. 25.000.00 கட்டணம் அறவிடப்பட வேண்டும். 1)ஆவது சந்தர்ப்பம்)	ரூ. 50. 000.00 கட்டணம் அறவிடப்பட வேண்டும். 2)ஆவது சந்தர்ப்பம்)	ரூ. 100. 000.00 கட்டணம் அறவிடப்பட வேண்டும். 3)ஆவது சந்தர்ப்பம்)

செயல்பாட்டு மற்றும் பிரதேச அபிவிருத்தி பிரிவு (8)121 –

<u>03. உரிமங்களில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை மீறி சுரங்க அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.</u>

<u>3.1 - 3.4.2 இற்கான மத்தியஸ்த கட்டணம் (பொறிமயமாக்கப்படாத)</u>

	தவறின் தன்மை	தமது காணிக்கு அண்மித்ததாக தனியார் காணிகளுக்கு ஒதுக்கிய வன ஒதுக்கம்			ஆறுகள், நீரோடைகள்/ பொதுச் சொத்துக்கள்/வீதிகளுக்கான காணிகளினுள் அகழ்தல்		
		முதல் சந்தர்ப்பம்	இரண்டாம் சந்தர்ப்பம்	மூன்றாம் சந்தர்ப்பம்	முதல் சந்தர்ப்பம்	இரண்டாம் சந்தர்ப்பம்	மூன்றாம் சந்தர்ப்ப
3.1	வன ஒதுக்கத்தை மீறுதல்(100 சதுரஅடி வரையில்)அதிகரிக்கும் ஒவ்வொரு 100 அடிக்கும்	ரூ. 10,000.00	ரூ. 15,000.00	ரூ. 25,000.00	ரூ. 20,000.00	ரூ. 30,000.00	ரூ. 50,000.00
3.11	அதிகரிக்கும் ஒவ்வொரு 100 சதுர அடிக்கும்	ரூ. 5,000.00	ரூ. 5,000.00	ரூ. 5,000.00	ரூ. 10,000.00	ரூ. 10,000.00	ரூ. 10,000.00
	தவறின் தன்மை	முதல் சந்தர்ப்பம்		இரண்டாம் சந்தர்ப்பம்		மூன்றாம் சந்தர்ப்பம்	
3.2	சுரங்க ண்ணிக்கை அதிகரித்தல்(ஒரு சுரங்கத்திற்கு)12’ x 8’ அல்லது அதற்கு குறைவாக	ரூ. 10,000.00		ரூ. 15,000.00		ரூ. 20,000.00	
3.2.1	அனுமதிக்கப்பட்ட பரப்பளவை விடவும் அகழ்தல் (50 சதுர அடி 100 வரையில்)	ரூ. 5,000.00		ரூ. 5,000.00		ரூ. 5,000.00	

3.2.2.	சுரங்கத்தின் ஆழம் முதல் 20 அடியினை மீறியுள்ள சந்தர்ப்பத்தில் மேலதிக பிணை வைப்புத்தொகை இல்லாத சந்தர்ப்பங்களில்	அதிகரிக்கும் ஒவ்வொரு 2000 கன அடிக்கும் ரூ. 10,000.00	அதிகரிக்கும் ஒவ்வொரு 2000 கன அடிக்கும் ரூ. 15,000.00	அதிகரிக்கும் ஒவ்வொரு 2000 கன அடிக்கும் ரூ. 25,000.00	அதிகரிக்கும் ஒவ்வொரு 2000 கன அடிக்கும் ரூ. 10,000.00	அதிகரிக்கும் ஒவ்வொரு 2000 கன அடிக்கும் ரூ. 15,000.00	அதிகரிக்கும் ஒவ்வொரு 2000 கன அடிக்கும் ரூ. 20,000.00
3.3	அனுமதியின்றி வெடிக்க வைத்தல் (கற் பாறைகளுக்கு வெடி வைத்தல்)	ரூ. 30,000.00 மத்தியஸ்த கட்டணம் + வெளித்தரப்பினர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பின் அது தொடர்பில் மதிப்பீடு செய்து குறித்த தொகையை அறவிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குதல்.		ரூ. 40,000.00 + இலக்கம் 1 இல் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படுத்துதல்.		ரூ. 50,000.00 மத்தியஸ்த கட்டணம் + இலக்கம் 1 இல் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படுத்துதல் மற்றும் உரிமத்தை இரத்துச் செய்து கறைநிரற் பட்டியல்படுத்தல்	
3.4	தமது காணியினுள் வேறாக்கப்பட்ட வன ஒதுக்கத்திற்கு சுரங்கம் அகழ்தல்	அதன் வன ஒதுக்க எல்லைக்கு அகப்பட்டுள்ள அளவை ஆராய்ந்து முதல் 6 அடிக்கு ரூ.10,000.00 இனை மத்தியஸ்த தொகையை அறவிடுவதுடன் அதிகரிக்கும் ஒவ்வொரு அடிக்கும் ரூ. 5000.00 வீதம் அறவிடுதல்.		முதல் 6 அடிக்கு ரூ.15,000.00 இனை அறவிடுவதுடன் அதிகரிக்கும் ஒவ்வொரு அடிக்கும் ரூ. 7500.00 வீதம் அறவிடுதல்.		முதல் 6 அடிக்கு ரூ. 20,000.00 இனை மத்தியஸ்த கட்டணமாக அறவிடுவதுடன் அதிகரிக்கும் ஒவ்வொரு அடிக்கும் ரூ. 10000.00 வீதம் அறவிடுதுடன் உரிமத்தை இரத்துச் செய்து கறைநிரற் பட்டியல்படுத்தல்.	
3.4.1	வேறு காணியில் சுரங்கம் அகழ்தல்	ஒவ்வொரு அடிக்கும் ரூ. 7000.00 வீதம் அறவிடுதல் மற்றும் கிடைக்கப்பெற்றுள்ள மாணிக்கக் கற்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் தொகையில் 50%இனை காணி உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு உரிமம் பெறுநர்களைப் பணித்தல்.					

3.4.2	அரசாங்க காணியில் அகழ்தல்/வீதிப் பாலங்கள்/மதகுகள்/ஆறுகள் நீரோடைகளின் ஒதுக்கம்	ஒவ்வொரு அடிக்கும் ரூ. 10000.00 வீதம் அறவிடுதல் மற்றும் வெளிக்கொண்டு வந்துள்ள இரத்தினக்கல் படுகையை அதிகாரசபை பொறுப்பேற்றல்.

3.3 - 3.4 - 3.5 சுரங்கம் வெட்டுதல், மாணிக்க கற்களை அகழ்தல் தொடர்பான தவறுகளை மத்தியஸ்தம் செய்தல் – உரிமங்களில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை மீறுதல் (இயந்திரங்களைப் பயன்படுத்தல்)

	தவறின் தன்மை (இயந்திரங்களைப் பயன்படுத்தல்)	முதல் சந்தரப்பம்	இரண்டாவது சந்தர்ப்பம்	மூன்றாவது சந்தர்ப்பம்
3.3.1	வன ஒதுக்கத்தை மீறியுள்ளமை ஆறுகள், நீரோடைகள் /பொதுச் சொத்துக்கள்/ பெருந்தெருக்களுக்கு வேறாக்கப்பட்டுள்ள வன ஒதுக்கம்(முதல் 500 சதுர அடி வரையில்)	ரூ. 45,000.00	ரூ. 55,000.00	ரூ. 75,000.00
3.3.1.2	அதிகரிக்கும் ஒவ்வொரு 500 சதுர அடிக்கும்	ரூ. 30,000.00	ரூ. 30,000.00	ரூ. 30,000.00
3.3.2	காணியினுள் ஏனைய பொதுவான வன ஒதுக்கத்தை மீறுதல் – முதல் 500 சதுர அடிக்கு	ரூ. 35,000.00	ரூ. 40,000.00	ரூ. 45,000.00
3.3.2.1	அதையும் மீறி அதிகரிக்கும் ஒவ்வொரு 500 சதுர அடிக்கும்	ரூ. 25,000.00	ரூ. 25,000.00	ரூ. 25,000.00
3.4	அனுமதிக்கப்பட்ட சதுர அடி அளவை மீறி சுரங்கம் அகழ்தல் (தமது காணியில்) முதல் 500 சதுர அடிக்கு	ரூ. 30,000.00	ரூ. 35,000.00	ரூ. 45,000.00
3.4.1	அதைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 500 சதுர அடிக்கு (இங்கு பிரயோக நிலைமைகளை கவனத்திற் கொண்டு அங்கீகரித்துள்ள	ரூ. 20,000.00	ரூ. 20,000.00	ரூ. 20,000.00

	சதுர அடியில் 20% வரையில் சுரங்கத்தின் அளவு அதிகரிக்கும்போது மத்தியஸ்த கட்டணமின்றி சுற்றறிக்கையின் பிரகாரம் பிணை மற்றும் ஏனைய கட்டணங்களை அறவிடுதல் வேண்டும்.)			
3.5	அனுமதிக்கப்பட்ட எணிக்கையை விடவும் அதிகமாக இயந்திரங்களைப் பயன்படுத்தல் பெக்கோ இயந்திரங்கள்/எக்ஸ்கவேட்டர்/இரத்தினக்கல் பரல் பம்பி (இயந்திரம் ஒன்றிற்கு)	ரூ. 85,000.00	ரூ. 100,000.00	ரூ. 125,000.00
3.5.1	அனுமதிக்கப்பட்ட இயலளவை விடவும் அதிகமான இயந்திரங்களைப் பயன்படுத்தல்	ரூ. 25,000.00	ரூ. 35,000.00	ரூ. 45,000.00
3.5.2	அனுமதிக்கப்பட்ட இயந்திர எண்ணிக்கையை விடவும் அதிகமான இயந்திரங்களைப் பயன்படுத்தி தோண்டுதல் (இயந்திரம் ஒன்றிற்காக)	ரூ. 20,000.00	ரூ. 25,000.00	ரூ. 30,000.00
4	அனுமத்திரம் அகழ்வு வளவில் காணப்படாமை/அலுவலருக்குச் சமர்ப்பிக்காமை	ரூ. 1500.00	ரூ. 2000.00	ரூ.2500.00
5	அனுமதியின்றி அகழ்வுப் பிரதேசத்தில் இருந்து மணல் அல்லது மண் கொண்டு செல்லுதல்	ரூ. 30,000.00	ரூ. 45,000.00	ரூ. 55,000.00
5.1	வாகனத்தை விடுவித்தல்	ரூ. 75,000.00	ரூ. 100,000.00	ரூ. 125,000.00
6	சட்டவிரோத அமுக்கப் பெருக்க இயந்திரங்களைப் பயன்படுத்துதல் (சுழியோடிகளுடன்)	ரூ. 20,000.00	ரூ. 30,000.00	பொருட்களை அரசுடமையாக்குதல்
7	ஆறுகள்/நீரோடைகளுக்கு நீர் மூலங்களுக்கு வண்டல் மணலை வெளியேற்றுதல்(உரிமம் பெற்ற காணியில் இருந்து)	ரூ. 20,000.00	ரூ. 30,000.00	ரூ. 40,000.00

8	வயல் மற்றும் பயிச்செய்கை நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் வண்டல் மணலை வெளியேற்றுதல்	ரூ. 20,000.00	ரூ. 30,000.00	ரூ. 40,000.00
9	பி.ப 6 மணிக்குப் பின்னர் இரவு நேரங்களில் பெக்கோ இயந்திரங்கள் மற்றும் இரத்தினக் கல் பரல் பம்பிகளைப் பயன்படுத்தி சுரங்கங்களை அகழ்தல்(உரிமத்துடன்)	ரூ. 20,000.00	ரூ. 30,000.00	அகழ்வு நடவடிக்கைகளை அல்லது பொறிமய அகழ்வை இரத்துச் செய்தல்.
10	அனுமதியின்றி இரத்தினக்கல் படிமங்களைக் கொண்டு செல்லுதல்	ரூ.10000.00 - ரூ. 333,333.33		
10.1	படிமங்களை அதிகார சபை பொறுப்பேற்க வேண்டுமென்பதுடன் அதிகார சபைக்கு கொண்டுவருவதில் போக்குவரத்து அசௌகரியங்கள் ஏற்படுகின்ற போது படிமங்களை விடுவிப்பதற்காக (ஒரு வாகனம்/ ஒரு நபர் என்ற அடிப்படையில்) வாகனத்தை விடுவிப்பதற்காக (தனியார் காணி)	ரூ. 50,000.00 - ரூ. 100,000.00		
11	அனுமதியின்றி மாணிக்க கல் ஏல விற்பனை/ விற்பனை செய்தல்	ரூ. 20,000.00 - ரூ. 333.333.33		
12	அனுமதியின்றி மாணிக்க கல் அகழ்வின் போது நபர்கள் கைது செய்யப்படல்	ரூ. 5,000.00 - வெட்டப்பட்ட சுரங்கக் குழிகளை மூடவைத்தல் பாதிப்பை யதார்த்த நிலைக்கு கொண்டுவரல்	ரூ. 7,500.00 - வெட்டப்பட்ட சுரங்கக் குழிகளை மூடவைத்தல் பாதிப்பை யதார்த்த நிலைக்கு கொண்டுவரல்	ரூ. 10,000.00 - வெட்டப்பட்ட சுரங்கக் குழிகளை மூடவைத்தல் பாதிப்பை யதார்த்த நிலைக்கு கொண்டுவரல்
13	அனுமதியின்றி நீர் மூலங்களில் படிமங்களை தோண்டுவதற்காக, நீர் மூலங்களை தடுத்து நீரோட்ட முறை மாற்றமடையும் வகையில்	குறைந்தபட்ச மத்தியஸ்த கட்டணம் ரூ. 30,000.00		

13.1	உபகரங்களின் பயன்பாட்டுடன் மாணிக்க கல் அகழ்தல். (ஜெக், கிரேன், பெலட் இயந்திரங்களைப் பயன்படுத்தி) உழவு இயந்திரம் பயன்படுத்துதல்	குறைந்தபட்ச மத்தியஸ்த கட்டணம் ரூ. 100,000.00
14	இங்கு குறிப்பிடப்படாத ஏனைய எந்தவொரு நிபந்தனையையும் மீறுதல்/ அனுமதியற்ற நடவடிக்கைகளுக்காக ரூ. 10,000.00 - 333.333.33 வரையில் மத்தியஸ்த கட்டணம் அறவிடப்பட முடியும்.	

பொதுவான நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்

01. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தவறுகளில் ஒன்றிற்கு விதிக்கக்கூடிய அதிகபட்ச இணக்கத் தொகை ரூ. 333,333.33 ஆகும்.
02. ஒரே உரிமத்தின் கீழ் 3 தவறுகளைச் செய்தால், தவறின் தன்மை மற்றும் தீவிரத்தை கருத்தில் கொண்டு அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக தடைசெய்தல் அல்லது தடைசெய்தல் மற்றும் வாய்ப்புக்களில் ஒன்றைச் செய்யலாம்.
03. அனைத்து இணக்கத் தொகைகளும் ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளன.
04. இணக்கக் கட்டணம் இலங்கை நாணயத்தில் மட்டுமே அறவிடப்பட வேண்டும். காசோலைகள்/பற்று அட்டைகள்/அல்லது பிற நாணயங்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது.
05. இணக்கக் கட்டணங்கள் தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே உடன்பாடு ஏற்படவில்லை என்றால், அந்த விடயத்தை பணிப்பாளர் (-) மூலம் தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரியிடம் ஆற்றுப்படுத்த வேண்டும். அங்கு இணக்கம் காணப்படவில்லை என்றால், சட்டப் பிரிவின் அறிவுறுத்தலின் பேரில் சட்ட நடவடிக்கைகளுக்காக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் இந்த விடயம் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.

06. அனுமதிப்பத்திரம் அல்லது பொருட்களை விடுவிப்பதற்கு முன், சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து தவறு சரி செய்யப்பட்டுள்ளதாக நடவடிக்கைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அதிகாரி/உதவி பிரதேச அபிவிருத்தி அதிகாரியிடமிருந்து

அறிக்கை பெறப்பட வேண்டும். (அகழப்பட்ட சுரங்கங்களை மூடுதல்/ … / பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளை துப்பரவு செய்தல் / உரிய பிணைத்தொகைகளை அறவிடுதல்/ இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தைப் பெறுதல்)

நடவடிக்கைகள் மற்றும் பிரதேச அபிவிருத்திப் பிரிவு – 121(8)

இணைப்பு 02

<u>சத்தியக்கூற்று</u>

இலக்கம்:131/6, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 05 முகவரியில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் லோட்டஸ் இன்டர்நெஷனல் டிரேட் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின் (பீவி இலக்கம் 95775) தற்போதைய பணிப்பாளர்களான இலக்கம்: 131/6, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 05 முகவரியில் வசிக்கும் கொலம்பகே லலிந்திர தில்ருக் பெரேரா (தே.அ.இ. 840415120V) மற்றும் இலக்கம்: 05, ஹய்லெவல் வீதி, பனாகொட முகவரியில் வசிக்கும் சியம்பலாப கங்கானம்லாகே காமினி சிசிர விக்ரமசிங்க (தே.அ.இ. 711661905V) ஆகிய நாம் பௌத்தர்களாக உண்மையுடனும், நேர்மையுடனும், பின்வரும் விடயங்களை உறுதியுரைக்கின்றோம்.

01. இங்கு உறுதி கூறுபவர்களாகிய நாம், லோட்டஸ் இன்டர்நெஷனல் டிரேட் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர்களாவோம்.

02. மேலே பெயர் குறிப்பிடப்பட்ட நாம் பணிப்பாளர்களாக பதவி வகிக்கும் மேற்படி நிறுவனமானது, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் கீழ் இயங்கும், இரத்தினபுரி மாவட்டத்தின் கிரிஎல்ல மற்றும் அயகம பிரதேச செயலகப் பிரிவுகள் வழியாகப் பாய்ந்தோடும் களுகங்கையின் கலதுர கங்கை மற்றும் களு கங்கையுடன் இணையும் ஆழமான நீர்ப்பகுதியான ஹெரணியாவகவிற்கு அருகிலுள்ள நில அளவை வரைபட இலக்கம் 515 உடன் தொடர்புடைய ஆற்றுப் பகுதியில் உள்ள இரத்தினக்கல் படுகையை அகற்றிக்கொள்வதற்கான கருத்திட்டம் தொடர்பான பகிரங்க போட்டித்தன்மைமிக்க கேள்விமனுக் கோரலின் போது, வரைபட இலக்கம் 515 இன் தொடர்புடைய 25% பகுதிக்கான உரிமைக்காக வேண்டி 2017 ஆம் ஆண்டில் அதற்கான உரிய வரித்தொகை உள்ளடங்கலாக ரூ. 1400 இலட்சம் (ரூ. 140,000,000) அளவிலான அதிகபட்ச விலைமனு சமர்ப்பிக்கப்பட்டு, அப்பணத்தை 2020ஆம் ஆண்டில் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

03. அதன்படி, இத்திட்டம் தொடர்பாக எமது நிறுவனத்திற்கும், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கும் இடையேயான முதலாவது ஒப்பந்தம் 2021ஆம் ஆண்டு அதிகார சபையின் அப்போதைய தலைவர் திலக் வீரசிங்கவுடன் ஒரு வருட காலத்திற்கு உட்பட்டு கைச்சாத்திடப்பட்டது என்பதும், அந்த ஒப்பந்தம் காலாவதியான பின்னர், அதனோடு தொடர்புடைய இரண்டாவது ஒப்பந்தம் அடுத்துவரும் 06 மாத காலத்திற்கு அதே தலைவருடனேயே கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு, அதன் பின்னர், 2022.07.24ஆந் திகதி தொடக்கம் 03 சந்தர்ப்பங்களில் தலா 06 மாத காலப்பகுதிக்கு மூன்று ஒப்பந்தங்கள் அப்போதைய தலைவர் விராஜ் டி சில்வாவுடனும் கைச்சாத்திடப்பட்டன.

04. இதனோடு தொடர்புடைய மேற்குறிப்பிட்ட பணத்தொகை மற்றும் கட்டுப் பணம் 2020ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தாலும், மேற்படி ஆவணங்கள் முன்மொழியப்பட்ட அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டு, இதன் முதல் ஒப்பந்தம் 2021ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னர், 2023.12.31ஆந் திகதி தொடக்கம் அந்த ஒப்பந்தங்களின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்ததும் அதன் காலத்தை நீட்டிப்பதற்கு மேற்குறிப்பிட்ட அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ள போதிலும், தற்போதுவரை அக்கருத்திட்டத்துடன் தொடர்புடைய புதிய ஒப்பந்தத்தை கைச்சாத்திட தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

05. இருப்பினும், இது தொடர்பாக ஐந்து சந்தர்ப்பங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அதிகாரசபை இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

06. இவ்வகையில் இந்தப் புதிய ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து அப்போது தலைவராக செயற்பட்ட திரு. விராஜ் டி சில்வாவிடம் நாம் வினவியபோது, அந்த அதிகாரசபைக்குப் பொறுப்பான அமைச்சராக செயற்பட்ட திரு.சாமர சம்பத் தசநாயக்கவின் ஒப்புதலை இதற்காகப் பெற வேண்டும் என தெரிவித்தார்.

07. அதன்படி, மேற்கூறிய அமைச்சரிடம் அத்தகைய ஒப்புதலை பெற முயற்சித்தபோது, புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமெனில், எமது நிறுவனம், அவரது தேர்தல் தொகுதியில் மேற்கொள்ளப்படும் நலன்புரி மற்றும் பிற கருத்திட்டங்களுக்கு நிதியுதவி மற்றும் பங்களிப்பை நல்க வேண்டும் என தெரிவித்தார்.

08. அத்தகைய கோரிக்கை மேற்கூறிய திட்டத்துடன் தொடர்புடையதாக இல்லாவிட்டாலும், எமது நிறுவனம் சம்பந்தப்பட்ட கருத்திட்டத்தில் அதிக அளவு நிதியை முதலீடு செய்திருந்தாலும், மேற்குறிப்பிட்ட அமைச்சரின் கோரிக்கையை நிறைவேற்ற நாங்கள் பல சந்தர்ப்பங்களில் பங்களித்திருந்தாலும், வணிக நெறிமுறைகள் மற்றும் தார்மீகக் கொள்கைகளுக்கு இணங்க, தொடர்புடைய கால வரம்பை மீறிய கோரிக்கைகளை எமது நிறுவனம் நிராகரித்ததோடு, இக்கருத்திட்டத்துடன் தொடர்புடைய ஒப்பந்தத்தின் ஏற்புடைய ஆவணங்களில் கையொப்பமிட்டு ஒப்புதல் வழங்காமைக்கு இதுவே காரணமாக அமைந்தது என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம் என்பதை இத்துடன் உறுதியுரைக்கின்றோம்.

09. இருப்பினும், இக்கருத்திட்டத்தின் காலத்தை நீடிப்புக்கு தற்போதைய பணிப்பாளர் சபையின் ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதாக மேற்படி அதிகாரசபை எழுத்து மூலமும் வாய்மொழிமூலமும் எமக்குத் தெரிவித்த சந்தர்ப்பங்களில், அந்த அதிகாரசபையின் அலுவலகத்திற்குச் சென்று, அதற்குரிய அனைத்து தரப்பினருடனும் இதனோடு தொடர்புடைய ஒப்பந்தத்தில் கையெழுத்திட

முயற்சித்த போதிலும், அதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முன்னாள் தலைவர் நடவடிக்கை எடுக்காததால், 400இற்கும் மேற்பட்ட சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களுக்கான வருமான வாய்ப்புகள் இழக்கப்பட்டதுடன், அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய வருமான வாய்ப்புகளையும் இழக்க நேரிட்டுள்ளது. அத்துடன் எமது நிறுவனத்தின் முதலீடுகளுக்கு ஏற்ற அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

10. இந்த நெருக்கடியான சூழ்நிலையைப் போக்கி, மேற்படி கருத்திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் தற்போது கடுமையாக எழுந்துள்ளது என்பதை இத்துடன் உறுதியுரைக்கின்றோம்.

இச்சத்தியக் கூற்றை மேற்குறிப்பிட்ட சத்திய கூற்றாளர்களுக்கு வாசித்துத் தெளிவுபடுத்தியதன் பிறகு அதை உண்மையென ஏற்றுக்கொண்டு 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04ஆந் திகதி கொழும்பில் எனது முன்னிலையில் தமது வழமையான கையொப்பத்தை இட்டார்கள் என்பதை சான்றுப்படுத்துகிறேன்.	1. 1. 2.